# உதயன்

சுடர் : 36 | கதிர் : 125 | புதன்கிழமை | பங்குனி 18 ஆம் நாள் 31 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 24 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111


## வவுனியா வருகிறார் கோத்தாபய

வவுனியா, மார்ச் 31
ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவுக்கு வரவுள்ளார். "கிராமத்துடன் உரையாடல்" என்ற உரையாடல் நிகழ்சியில் கலந்து 23 ➤

## யாழ். கொரோணாத் தொற்று பெரும் பிரச்சினை இல்லை!

### அரசின் நிலைப்பாடு இது



யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்ப்பாணத்தில் திடீரென அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்று பாரதூரமான தொரு பிரச்சினை அல்ல. அதனை விரைவில் கட்டுப்ப டுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச் சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார். 23 ➤

## யாழ்ப்பாணத்தில் 27 பேருக்குத் தொற்று

- யாழ்ப்பாணம் நகரில் 14 பேர்
- வடக்கில் மொத்தம் 29 பேர்

யாழ்ப்பாணம், மார்ச் 31
வடக்கு மாகாணத்தில் நேற்று 29 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. அவர்களில் 27 பேர் யாழ்ப்பாணத்தை யும், ஏனைய இருவர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவையும் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வ ரன் தெரிவித்தார். 23 ➤



## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31
கிளிநொச்சி கந்தசுவாமி ஆல யத்துக்கு முன்பாக நேற்று மாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஒருவர் படு காயமடைந்துள்ளார்.
ஏ9 வீதியால் பரந்தன் நோக்கிப் பயணித்த 23 ➤



## தொல்பொருள் எச்சங்கள் வரணியில் கண்டுபிடிப்பு

கொடிகாமம், மார்ச் 31
தென்மராட்சி வரணி வடக்குப் பகுதியில் தொல்பொருள் எச்சங்களான சுமை தாங்கி மற்றும் குடிதண்ணீர் கிணறு என் பவை கண்டுபிடிக்கப்பட்டு, அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டு அண்மை யில் சீரமைக்கப்பட்டுள்ளன. 23 ➤




முச்சந்தி முரளி

"பாரதூரமில்லாட்டி ஏனாம் இப்பிடி முடக்கி வைச்சிருக்கி னம்? எல்லா ஏரியாவையும் திறந்துவிடலாமே"

## இலங்கை கடலுக்குள் ஒருபோதும் இந்திய மீனவர் நுழைய முடியாது

### அமைச்சரவைப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 31
இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர் களுக்கு அனுமதி வழக்கும் வகையில் எந்தவொரு தீர்மா னத்தையும் அரசு எடுக்கவில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச் 23 ➤



## சுதந்திரக்கட்சி அரசை அமைக்கவே முயற்சி!

### மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் மைத்திரி அதிரடி

கொழும்பு, மார்ச் 31
சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசை அமைக்கும் எதிர்பார்ப்பில் இருக்கின்றேன். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 23 ➤

## 'தில்' இருந்தால் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

### கோத்தாவுக்கு சஜித் சவால்



கொழும்பு, மார்ச் 31
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வுக்கும் அவர் தலைமையிலான அரசுக்கும் துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலை இவ் வருடம் நடத்திக் காட்டட்டும். இவ்வாறு சவால் விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலை வருமான சஜித் பிரேம 23 ➤


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் இக்க கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)





இதயம் போதும் எனும் வரை SCROLL செய்யுங்கள்
விரல்கள் போதும் எனும் வரை CHAT செய்யுங்கள்
கண்கள் போதும் எனும் வரை VIDEO பாருங்கள்
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.

398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது
SELFCARE APP ஊடாக
இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.

TRC/M/PRC/20/07
www.sltmobitel.lk
SLTMOBITEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாகாண சபைத் தேர்தல்; கட்சிகளுடன் கலந்தாய்வு



## ஜனாதிபதியின் முடிவென்கிறார் உதய கம்மன்பில

**கொழும்பு, மார்ச் 31**

**மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பில், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி இறுதி முடிவை எடுப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தீர்மானித்துள்ளார் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த இணையவழி ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தல் முறைமையை மறுசீரமைப்பது தொடர்பான சட்ட வரைவு அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. உறுதியானதொரு மாகாண சபையை உருவாக்கும் நோக்கில், போனஸ் ஆசனங்களை அதிகரிக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது. தற்போது மாகாணமொன்றில் அதிகூடிய வாக்குகளைப்பெறும் கட்சிக்கு 2 போனஸ் ஆசனம் வழங்கப்படுகின்றது. மேற்படி யோசனையின் பிரகாரம் மாவட்ட ரீதியில் 2 போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும்.

அந்தவகையில் மேல் மாகாணத்தில் 3 மாவட்டங்கள் உள்ளன. இதுவரை 2 போனஸ் ஆசனங்கள் வழங்கப்பட்ட நிலையில், அந்த எண்ணிக்கை 6ஆக அதிகரிக்கக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. அதேபோல வடமத்திய மாகாணத்தில் இரண்டு மாவட்டங்கள் உள்ளன. அங்கு போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கையை 4ஆக அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக பிரதேசத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய பிரதிநிதி இருக்க வேண்டும் என்பதால், 70 வீதம் தொகுதி அடிப்படையிலும், 30 வீதம் விகிதாசார அடிப்படையிலும் தெரிவுசெய்வதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், தொகுதியொன்றில் ஒரு கட்சி மூன்று வேட்பாளர்களை நிறுத்த முடியும் என்ற திட்டமும் முன்வைக்கப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சர்களும் கருத்துக்களை முன்வைத்தனர். இதனையடுத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, இறுதி முடிவொன்றை எடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக்கட்சிகளும் அமைச்சரவையில் இடம்பெறவில்லை. எனவே, கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்கும் நோக்கிலேயே கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது- என்றார். (க-44)

# மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்தவேண்டாம்

## கோத்தாவுக்கு பௌத்த தேரர்கள் கடிதம்

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்று இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்ற நிலையில், அதற்கு எதிராகப் பௌத்த தேரர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

நாட்டில் தற்போதிருக்கும் சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் எனத் தெரிவித்து முக்கிய பௌத்த தேரர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர், கசப்ப தேரர், விமலஜோதி தேரர் உட்படப் பல தேரர்களின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-22)

# கோத்தாபய அரசு விரைவில் கவிழும்

## ஜே.வி.பி. ஆருடம்



கொழும்பு, மார்ச் 31

'இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் மோசமான அரசாக கோத்தாபய அரசு தடம் பதித்துள்ளது. இந்த அரசு கவிழும் காலம் வெகுதொலைவில் இல்லை இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த அரசின் எதேச்சாதிகாரப் போக்கால் நாட்டின் ஜனநாயகம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மட்டத்தில் நாடு பேரவமானத்தைச் சந்தித்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்துக்குச் சென்றுள்ளது. வறுமையின் பிடியில் சிக்கும் நிலையை நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். அரசின் திமிர்த்தனத்தை அடக்கவே வெளிநாடுகளால் இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது நாட்டுக்குப் பேராபத்தை ஏற்படுத்தியுள்ளது. எந்த மக்களின் ஆதரவுடன் இந்த அரசு ஆட்சிக்கு வந்ததோ அந்த மக்களாளேயே இந்த அரசு விரைவில் கவிழ்க்கப்படும்' என்றார். (ம-22)

# ஜெனிவா நெருக்கடியில் இருந்து மீள அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

ஜெனிவாத் தீர்மானத்தை வைத்து எதிரணி அரசியல் பிழைப்பு நடத்தவில்லை. ஜெனிவா நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக, அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராகவே இருக்கின்றோம். அதற்காக சர்வதேசத்தின் நம்பிக்கையை வெல்லும் வகையில் உள்ளகப் பொறிமுறை நிறுவப்பட வேண்டும். இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது,

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு, அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்த கருத்துகளுக்கு பதில் வழங்குகையிலேயே கலாநிதி ஹர்ஷ டி சில்வா மேற்படி அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாத் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து எதிரணியினர் மாயையைத் தோற்றுவித்து வருகின்றனர் என்று ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நாம் மாயையைத் தோற்றுவிக்கவில்லை. உண்மை நிலவரம் என்னவென்பது தொடர்பில் தெளிவுபடுத்தல்களை முன்வைத்து வருகின்றோம். எனவே, யாதார்த்தம் என்னவென்பதைப் புரிந்து கொண்டு இப் பிரச்சினையில் இருந்து வெளியே வருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு நாம் தயார். இது தொடர்பில் எமது தலைவர் நாடாளுமன்றத்திலும் அறிவிப்பு விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் போர்க்காலம் குறித்து மட்டும் குறிப்பிடப்படவில்லை. அது தொடர்பில் ஓரிரு பக்கங்களே உள்ளன. நடப்பு அரசின் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களே பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக ஜனநாயக விரோதச் செயற்பாடுகள், இனவாதம், சுயாதீன நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்படுகின்றமை, இராணுவ மயமாக்கல், கருத்து சுதந்திர மறுப்பு மற்றும் அரசை விமர்சிக்கின்றனவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றமை ஆகியவை உள்ளிட்ட விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை, போர்க் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம், சர்வதேச நம்பிக்கையை வெல்லும் விதத்திலான சுயாதீன பொறுப்புக்கூறல் பொறிமுறை உருவாக்கவேண்டும். அப்போதுதான் இப் பிரச்சினையில் இருந்து மீள முடியும். அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால் கூட சர்ச்சைகள் உருவாகாது.

அதேபோல ஒற்றையாட்சிக்குள் இறைமை, சுயாதீனம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதிகாரப் பகிர்வும் இடம்பெற வேண்டும்- என்றார். (ஒ-44)

# தவறான முடிவெடுத்து மாணவி உயிரிழப்பு

கொடிகாமம், மார்ச் 31

தவறான முடிவு எடுத்த மாணவியொருவர் உயிரிழந்தார். இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்றது.

17 வயதுடைய மாணவியே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

## இ.போ.ச.வின்

# வவுனியா சாலை ஊழியர்களுக்கு பி.சி.ஆர். சோதனை



வவுனியா, மார்ச் 31

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை ஊழியர்களிடம் நேற்று பி.சி.ஆர். சோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் உட்பட வடமாகாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை தீவிரமடைந்ததை அடுத்து பல்வேறு இடங்களிலும் எழுமாற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே வவுனியா சாலை ஊழியர்களுக்கு பி.சி. ஆர். சோதனை மேற்கொள்ள ப்பட்டுள்ளது.

காரைநகர் சாலையில் பணியாற்றும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் சிலருக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை வலுப்படுத்த அரசமைப்பு அத்தியாவசியம்

## ஜே.வி.பி. வலியுறுத்து



கொழும்பு,மார்ச் 31

**இலங்கையில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் என்பனவற்றை மேலும் வலுப்படுத்த அரசமைப்பு அத்தியாவசியமானதாகும். அதற்கமையவே நாம் புதிய அரசமைப்புக்கான பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

புதிய அரசமைப்புக்கான, ஜே.வி.பி.யின் பரிந்துரைகளைக் கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிய அரசமைப்பு உருவாக்கத்தினூடாக மாத்திரம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்று கூற முடியாது. இலங்கையில் நீண்ட காலம் நிறைவேற்றதிகார ஆட்சி முறைமை காணப்பட்ட போதிலும் அது தோல்வியடைந்துள்ளது. எனவே, நாடாளுமன்றை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறைமையையே நாம் வலியுறுத்துகின்றோம்.

நிறைவேற்றதிகார முறைமை நீக்கப்படும் பட்சத்தில், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றை உள்ளடக்கும் வகையிலான தேர்தல் முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்பதை எமது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளோம்.

அத்தோடு வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடும்போது அது எவ்வகையான ஒப்பந்தமாகக் காணப்பட்டாலும், நாடாளுமன்றுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

இதேவேளை இரட்டைக் குடியுரிமை விவகாரம் தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளோம். இந்த இரட்டைக் குடியுரிமை விவகாரம் 19 ஆம் அரசமைப்பில் நீக்கப்பட்டு 20 ஆவது அரசமைப்பில் மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே, தேர்தலில் போட்டியிடுபவர்கள் மாத்திரமின்றி அரசின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படும் எவரும் இரட்டை குடியுரிமையைக் கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்பதை புதிய அரசமைப்புக்காகப் பரிந்துரைத்துள்ளோம். நாடாளுமன்றின் அனுமதியின்றி திறைசேரியிலிருந்து எதற்காகவும் நிதி செலவிடப்படக் கூடாது என்பதையும் குறிப்பிட்டுள்ளோம்.

அரச சொத்துக்கள் மற்றும் அரச நிதியை உபயோகிக்கும் எந்தவொரு நிறுவனமும் நாடாளுமன்றுக்குப் பொறுப்புகூற வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். இதைப்போன்று அடிப்படை உரிமைகள் தொடர்பான பல விட யங்களை யும் எமது பரிந்துரைகளில் உள்ளடக்கியுள்ளோம்.

இந்தியா கூறியுள்ளதால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவார் என்று எதிர்பார்க்கின்றோம்- என்றார். (க-இ)

# அமைச்சரவையில் ஒலித்தது தொண்டர்களின் பிரச்சினை

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் சுகாதாரத் தொண்டர்களின் கோரிக்கை தொடர்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

ஏற்கனவே யாழ் வந்திருந்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயைச் சந்தித்த பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் அவரிடம் தங்களுடைய கோரிக்கையை முன்வைத்திருந்தனர். தமக்கு நியமனம் கிடைக்கும் வகையில் அமைச்சரவை ஊடாக பரிகார நீதியை வழங்குமாறு அவர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையிலேயே அமைச்சரவைக் கூட்டத்தில் சுகாதாரத் தொண்டர்கள் பற்றிய விடயம் பேசப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-20)

## குடும்பத்துடன் விபத்து: 8 வயதுச் சிறுமி சாவு

கொழும்பு,மார்ச் 31

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பயணித்த கார், கால்வாய்க்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில், 8 வயதுச் சிறுமி உயிரிழந்தார். இந்த விபத்து இராஜாங்கனைப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடந்துள்ளது. காரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகள்மார் மூவர் பயணித்துள்ளனர். குடும்பத்தின் இளைய மகளே விபத்தில் உயிரிழந்துள்ளார். (க-இ)

# மக்களை எமனிடம் அனுப்புவதே கோத்தாபய அரசின் திட்டம்



கொழும்பு, மார்ச் 31

தமிழ் சிங்களப் புத்தாண்டை கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் கடந்த ஆண்டு கொண்டாடினோம். இந்த ஆண்டு புற்றுநோயை ஏற்படுத்தும் தேங்காய் எண்ணெயுடன் கொண்டாட வேண்டியுள்ளது. மக்களை உயிருடன் வாழ வைக்காமல் எமனிடம் அனுப்புவதே தற்போதைய அரசின் கடமையாகியுள்ளது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

புற்று நோயை ஏற்படுத்தக்கூடிய ஆயிரக்கணக்கான மெற்றிக் தொன் எடையுடைய தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய்க்கான மாற்றீடுகளை இந்நாட்டுக்கு திருட்டுத்தன மாக இறக்குமதி செய்துள்ளனர். இந்தத் தே.எண்ணெய் புற்று நோயை ஏற்படுத்தக்கூடியது என சுகாதார பிரிவினரால் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் அவற்றைத் தடை செய்துள்ளனர். எனினும் இதனை நாட்டுக்கு கொண்டுவந்த நிறுவனங்கள் அவற்றை சுத்திகரித்து தரச் சான்றிதழ்களையும் கூட்டாக இணைந்து பெற்றுக் கொண்டுள்ளன. தற்போது தமிழ் சிங்கள பண்டிகைக் காலத்தின்போது தேங்காய் எண்ணெயின் பாவனை அதிகமாகக் காணப்படும். இவ்வாறான நிலையில் மக்களை புற்றுநோய்க்காரர்களாக மாற்றி அவர்களை சாகடிக்கச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார். (ப)

## ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் விபத்தில் காயம்

சாவகச்சேரி, மார்ச் 31

கார் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஏ9 வீதி மீசாலையில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த மூவர் இரு மோட்டார் சைக்கிள்களில் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றுள்ளனர். அவ்வேளையில் அதே மார்க்கத்தில் வந்த கார் ஒன்று முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை மோதியுள்ளது.

அந்த மோட்டார் சைக்கிள் அதற்கு முன்னால் சென்ற மற்றைய மோட்டார் சைக்கிளை மோதியுள்ளது.

இந்த விபத்தில், மோட்டார் சைக்கிள்களில் பயணித்த தந்தை, தாய், மகள் ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-9)



# மாகாணத் தேர்தலுக்கு மகா சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 31

மாகாண சபை முறைமை இலங்கைக்குப் பொருத்தமற்றது. எனவே மாகாண சபைத் தேர்தலை நடத்தும் தீர்மானத்தை அரசு கைவிட வேண்டும்.

இல்லாவிடின் மகா சங்கத்தினரை ஒன்றிணைத்துப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு நாட்டு மக்கள் எவ்விடத்திலும் கூறவில்லை. மாறாக அரசியல்வாதிகளே மாகாண சபை முறைமை ஊடாக இலாபம் பெற்றுக் கொள்ளப் போராடுகின்றனர். தேர்தல் காலத்தில் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு நன்றி கடன் செலுத்தும் வகையில் அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்த முயற்சிக்கிறது.

மாகாண சபை முறைமை ஊடாக எவ்வித பயனும் ஏற்படவில்லை. மாறாக மிதமிஞ்சிய செலவுகள் மாத்திரமே ஏற்பட்டுள்ளன.

மாகாண சபை முறைமையை முழுமையாக இரத்துச் செய்து உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். எனவே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அரசு முதலில் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (க-இ)

# அவசியமெனக் கருதும் திட்டங்களை அனுப்புக

## மாவட்டச் செயலகம் அறிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 31

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக பிரிவுகளில் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தலா 500 மில்லியன் ரூபா செலவில் அவசியமெனக் கருதும் வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான விபரங்களை அனுப்பி வைக்குமாறு மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. இதன்படி, பாதைகள், நீர்ப்பாசனம், பாடசாலை , சுகாதாரம் மற்றும் நகரை அழகுபடுத்தல் ஆகியவை தொடர்பான செயற்திட்டங்களின் அடிப்படையில் அவசியம் எனக் கருதும் வேலைத் திட்டங்களை அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட நிதியை வழங்கக்கோரி மன்னாரில் கவனவீர்ப்பு போராட்டம்

மன்னார், மார்ச் 31

**வீட்டு திட்டத்துக்கான நிதியை முழுமையாக வழங்குமாறு கோரி மன்னார் மாவட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மன்னார் நகர சபை மைதானத்தில் இருந்து ஆரம்பமான இப் போராட்டப் பேரணி, மன்னார் பொது மருத்துவமனை ஊடாக மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது.**




போராட்டத்தில் ஈடுபட்டோர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கமானது எமக்கு வீட்டுத் திட்டம் தராமல் இருந்திருக்கலாம் நாங்கள் கௌரவமாகவும் நிம்மதியாகவும் இருந்திருப்போம். கடந்த அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி நாங்கள் வாழ்ந்த நல்ல நிலையிலிருந்த சிறு வீடுகளையும் உடைத்து கடன்பட்டு, நகைகளை அடகு வைத்து இந்த வீடுகளைக் கட்டி முடித்து விட்டு நடுவீதியில் ஆர்ப்பாட்டங்களை செய்து கொண்டிருக்கின்றோம். எமக்கான நல்லதொரு முடிவை தற்போதைய அரசாங்கத்தால் நிச்சயமாக வழங்க முடியும்.

அவ்வாறு தராத பட்சத்தில் வீட்டு திட்டத்தால் கடனாளிகளாகிய பாதிக்கப்பட்ட மக்களாகிய நாங்கள் சுழற்சி முறையான உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளோம் என்றனர். (ஐ-213)

# மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 31

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 08 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்படவுள்ள பகுதிகள் தொடர்பில் மின்சாரசபை அறிவித்துள்ளது.

**யாழ் பிரதேசத்தில்,**

கணபதி ஆலை, கொற்றாவத்தை, நவிண்டில் உடுப்பிட்டி வதிரி வீதி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** ஜெயபுரம் தேவாலயம், ஜெயபுரம் பாடசாலை, ஜெயபுரம், கிராஞ்சி, கிராஞ்சி சிவபுரம், நாகபடுவான், பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில் அன்பு புரம், டொன் பொஸ்கோ பல்லவராயன்கட்டு, இரணைமாதா நகர், கிருஷ்ணநகர், குமுழமுனை, முழங்காவில், முழங்காவில் கோபுரம், நாச்சிக்குடா டயலொக் கோபுரம், நாச்சிக்குடா, நாச்சிக்குடா சின்னப் பல்லவராயன்கட்டு சோலை, சோலை பல்லவராயன்கட்டு, முழங்காவில் ஐஸ் தொழிற்சாலை, முழங்காவில் கடற்படை முகாம், கனகராயங்குளம், ஆலங்குளம், புதுவிளான், குறிசுட்டான்குளம், மன்னங்குளம், முதிரங்குளம், பரசங்குளம், பெரியகுளம் 561 பிரிகேட் இராணுவ முகாம், பெரியகுளம் சேவாலங்கா, பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையத்தடி கனகராயங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம்,

**வவுனியா பிரதேசத்தில்,**

சின்னசிப்பி குளம், தந்திரிமலை வீதி, வீரபுரம், நியூ ஸ்ரீல் பிவிரி லிமிடெட் இரும்பு தொழிற்சாலை, சமணங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைபட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# இலங்கைக்கு எப்போதும் உறுதுணையாக நிற்போம்

### சீன ஜனாதிபதி உறுதி

கொழும்பு, மார்ச் 31

இலங்கையின் நிலையான அபிவிருத்திக்குத் தொடர்ந்து ஆதரவளிப்போம். சர்வதேச அரங்கில் இலங்கை எதிர்கொள்ளும் அழுத்தங்களுக்கு முகங் கொடுக்கும் வகையில், இலங்கைக்கு உறுதுணையாக நிற்போம் என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உறுதியளித்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோருக்கிடையிலான தொலைபேசி உரையாடல் நேற்று முன்தினம் மாலை நடந்துள்ளது. இதன்போது சீன ஜனாதிபதி இந்த வாக்குறுதியை வழங்கினார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனைத்துத் துறைகளிலும் பரஸ்பர நன்மை பயக்கும் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் சீன ஜனாதிபதி ஒப்புக் கொண்டார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளித்தமைக்கு, ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன அரசுக்கு ஜனாதிபதி கோத்தாபய நன்றி தெரிவித்தார். இலங்கைக்கு சீனா தொடர்ந்து தேவையான உதவிகளை வழங்கும், விமானப் போக்குவரத்து மற்றும் கல்வி உள்ளிட்ட பகுதிகளில் ஒத்துழைப்புக்களை வழங்கும். பட்டுப் பாதை ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், தொற்றுநோய்க்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு பங்களிப்பதற்கும், சீனாஇலங்கையுடன்இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளது என்றும் ஜனாதிபதி ஜி ஜின்பின் தெரிவித்தார்.ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை சீனாவுக்கு வருகை தருமாறும் அவர் அழைப்பு விடுத்தார்- என்றுள்ளது. (க-இ)

# சர்ச்சைக்குள்ளான பொலிஸ் அதிகாரி கைது

### ஒழுக்காற்று நடவடிக்கைக்கு சரத் வீரசேகர ஆலோசனை

கொழும்பு,மார்ச் 31

நடுவீதியில், பொதுமகன் ஒருவரைக் கடுமையாகத் தாக்கி, கீழே தள்ளிவிட்டு, ஏறிக் குதித்து, மிதித்த குற்றச்சாட்டின் கீழ் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த, போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரி, நடுவீதியில், பொதுமகன் ஒருவரைக் கடுமையாகத் தாக்கும் காட்சிகள் அடங்கிய வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலாகியிருந்தது. பன்னிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தாக்குதலுக்கு உள்ளான நபர் லொறியொன்றின் சாரதி என்று தெரியவந்துள்ளது. மஹரகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அதிவேக நெடுஞ் சாலையில் பன்னிப்பிட்டியப் பகுதியில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. லொறியின் சாரதி, போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி மீது மோதி காயமேற்படுத்தியுள்ளார். இதனையடுத்து, அங்கிருந்த போக்குவரத்து பொலிஸ் அதிகாரி குறித்த சாரதியைத் தாக்கியுள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் பாதுகாப்புஅமைச்சர், பொலிஸ்மா அதிபருக்கு விசேட ஆலோசனை வழங்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து, பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (க-இ)

# பாதாளத்துக்கு செல்லும் ரூபாவின் பெறுமதி

கொழும்பு, மார்ச் 31

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 201.77 ரூபாவாக உள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 197.28 ரூபாவாக உள்ளது.

இலங்கை ரூபா அமெரிக்க டொலருக்கு எதிராக 201.77 ரூபாவாக உள்ளமை வரலாற்றிலேயே இதுவே முதல் தடவையாகும். (ஒ.இ)

# இலங்கையின் நியமனத்தை ஏற்க மறுக்கிறதா இந்தியா?

கொழும்பு, மார்ச் 31

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொரகொடவின் நியமனத்தை இந்தியா நிராகரித்துள்ளது என்று வெளியாகியுள்ள தகவலை இலங்கை மறுத்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது

“இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொரகொடவின் நியமினத்தை அந்நாடு நிராகரித்துள்ளது.

எனவே, இது தொடர்பில் அரசு மீள் பரிசீலனை செய்யுமா?” என்று ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, அமைச்சர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சரவைக்கு அவ்வாறானதொரு அறிவிப்பு விடுக்கப்படவில்லை. எனக்கு தெரிந்தவரை மிலிந்த மொரகொடவே இலங்கைத் தூதுவராக இந்தியா செல்ல உள்ளார் என்று உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (ற-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பரவத் தொடங்கும் நச்சுச்சூழல்

“எனக்கு ஊடக சுதந்திரத்தை வழங்கவும் தெரியும் , நசுக்கவும் தெரியும்' என்று ஜனாதிபதி கோத்தாபய திருவாய் மலர்ந்தருளி ஒரு சில நாள்கள் கூட கடக்கவில்லை. ஆனால் அதற்கிடையில் ஊடகங்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் பணிகள் செவ்வனே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

நேற்றுமுன்தினம் 'யூரியூப்'சனல் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த பெண்ணொருவரும், ஆணொருவரும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினாரல் கைதுசெய்யப்பட்டு , மேலதிக விசாரணைக்கென கொழும்பு நாலாம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் வகையில் குறித்த 'யூரியூப்'சனலை நடத்தினார்கள் என்றே அவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் குறித்த 'யூரியூப்'சனல் கூட, அரசாங்கத்துக்கு மிக நெருக்கமான ஒன்றுதான். ஏற்கனவே அந்த 'யூரியூப்'சனல் மீது ஏராளமான சர்ச்சைகள் படிந்திருந்த போதும், பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதும் எவ்விதமான நடவடிக்கையும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை இப்போது திடுதிடுப்பென அந்த நிறுவனம் மீது, பயங்கரவாத தடுப்புப் பிரிவு பாய்ந்திருப்பது பலத்த சந்தேகங்களை உண்டுபண்ணியுள்ளது. குறிப்பாக அரசாங்கத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்ததார் எனச் சொல்லப்படும் நபர் ஒருவருடன் அவர்கள் மோதிக் கொண்டதன் பின்னணியிலேயே இந்தக் கைது நடந்திருக்கலாம் எனவும் பெரும்பாலானோர் சந்தேகிக்கின்றனர். அதேவேளை புலம்பெயர் தமிழர் ஒருவராலேயே இந்த நிறுவனம் நடத்தப்படுவதால், அரசாங்கத்தால் அண்மையில் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்ட அமைப்புகளுக்கும் இந்த நிறுவனத்துக்கும் தொடர்புகள் இருப்பதாலேயே பயங்கரவாத தடுப்புப் பிரிவு பாய்ந்திருக்கலாம் என்று இன்னொரு சாரார் சொல்கின்றனர்.

இந்தக் கைதுகள் நிகழ்ந்த பரபரப்பு அடங்குவதற்கிடையில் இன்னொரு ஊடகவியலாளர் 3 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அரசாங்கத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ள நபர் ஒருவர் குறித்த ஊடகவியலாளருடன் 'பேஸ்புக்கில்' நட்பாக இருந்தார் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். சமூக வலைத்தளம் என்பது கட்டற்ற பெருவெளி. அதில் யார் யாரெல்லாம் நண்பர்கள், அவர்களின் பின்புலம் என்ன என்பவற்றையெல்லாம் எவரும் ஆராய்வது மிக அரிது. அத்துடன் ஊடகவியலாளர்கள் செய்திகளைப் பெற்றுக் கொள்ள சமூகத்தின் பல்வேறு தரப்புகளுடனும் தொடர்புகளைப் பேணுவது இயல்பானதொன்று. அப்படி சமூக வலைத்தளத்தில் தடை செய்யப்பட்ட ஒருவரோடு நட்பை பேணுவதைக் குற்றமாகக் கருதி ஊடகவியலாளர்களை விசாரணை வளையத்துக்குள் கொண்டு வருவதோ, அச்சுறுத்துவதோ ஏற்றுக்கொள்ளப்பட முடியாத செயல்.

மேற்குறித்த சம்பவங்களுக்கு முன்னரே அரசாங்கம் ஊடகங்களின் கருத்துரிமையைப் பறிக்கும் கைங்கரியத்தில் இறங்கியிருந்தது. குறிப்பாக தமிழ்த் தேசியத்தின் வழியில் பயணிக்கும் ஊடகமான உதயன் மீது , விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப் படத்தை பிரசுரித்தமைக்காக வழக்கு தொடுத்தமையும் இவ்வாறான ஊடக சுதந்திரத்தின் குரல்வளையை அறுக்கும் செயற்பாட்டின் முன்னோட்டமே. இதுவொரு நச்சுச் சூழல். இது தொடருமாக இருந்தால், எஞ்சியுள்ள சகல தமிழ் ஊடகங்களும் அரசாங்கத்தின் அநீதிகளைத் தட்டிக் கேட்கவோ, மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கவோ முடியாத நிலை உருவாகவும் கூடும். எனவே இலங்கையில் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதை உலகறியச் செய்யவேண்டும். சர்வதேசத்துக்கு அஞ்சியாவது ஊடகங்கள்மீது கண்டபடி கைவைப்பதை அரசாங்கம் தவிர்க்கக்கூடும். ஊடக சுதந்திரத்துக்காக அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவேண்டிய தருணம் இது.




# தென்மராட்சிப் பாடசாலைகளில் 50க்கும் குறைவான மாணவர்கள்

### *30 பாடசாலைகள் மூடப்படும் அபாயம் என சாவ. நகர உறுப்பினர் எச்சரிக்கை*

**சாவகச்சேரி, மார்ச் 31**

**யாழ். தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 60 பாடசாலைகளில் 30க்கும் மேற்பட்ட பாடசாலைகள் இழுத்து மூடப்படும் அபாயநிலையில் உள்ளன என்று சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் எச்சரித்துள்ளார்.**

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது;

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகளில் இணையும் மாணவர் தொகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது. மீசாலை கிழக்கில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் இவ்வருடம் முதலாம் தரத்துக்கு ஒரு மாணவர் கூட அனுமதி கோரி விண்ணப்பிக்கவில்லை. இது எதிர்காலத்தில் கல்வித்துறையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். தற்சமயம் நாட்டில் இருநூறு பிள்ளைகளுக்கும் குறைவாகக் காணப்படும் பாடசாலைகளை மூடுவது தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது இந் நிலையில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 60 பாடசாலைகளில் 54 பாடசாலைகளே தற்சமயம் இயங்கி வருகின்றன. ஆறு பாடசாலைகள் சில பல காரணங்களால் ஏற்கனவே மூடப்பட்டு விட்டன. பொறுப்பு வாய்ந்த கல்வி அதிகாரி ஒருவரின் தகவலின் படி தென்மராட்சியில் 30 பாடசாலைகளில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களே கல்வி பயில்கிறார்கள். கல்வி அமைச்சின் யோசனை நடைமுறைக்கு வருமானால் தென்மராட்சிப் பிரதேசத்தில் மாத்திரம் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளை மூட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும். ஒரு பாடசாலையை தீர்மானம் நிறைவேற்றி மூடுவது சுலபம். ஆனால் அதே பாடசாலையை ஆரம்பிப்பது மிகமிகக் கடினமான செயற்பாடு. அத்துடன் தென்மராட்சியில் குறைந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகள் சிலவற்றை அருகில் இருக்கும் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை நாம் தொடர்ச்சியாக எதிர்த்து வருகிறோம் - என்றார். (ப-9)

# 50 நாள்களை எட்டுகிறது போராட்டம்; பிரச்சினைகளைத் தீர்த்து வையுங்கள்

### *ஸ்ரீநகர் கிராம மக்கள் கோரிக்கை*

வவுனியா,மார்ச் 31

வவுனியா, ஸ்ரீநகர் கிராம மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறுகோரி முன்னெடுக்கப்பட்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டம் 50 நாள் களை எட்டுகின்ற நிலையில், போராட்டக் காரர்களால் அது தொடர்பான துண்டுப்பிரசும் ஒன்று நேற்று விநியோகிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எமது கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை வலியுறுத்தி தொடர்ச்சியாக எமது சனசமூக நிலைய முற்றத்தில் இரவு பகலாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம், காணிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கவேண்டும், வீடு அற்றவர்களுக்கு வீடு, பொருண்மியம் நலிவுற்ற மக்களின் வீடுகளைத் திருத்துவதற்கு உதவி, பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளிக் கட்டமைப்பு,விளையாட்டு மைதானம் மற்றும் கிராமத்தின் வடிகாலமைப்பு போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வருகிறோம்.

உரிய திணைக்களங்களுடன் பேசி பிரச்சினைகளுக்கு 14 நாள்களுக்குள் தீர்வு பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலாளர் கூறிய போதிலும் இன்னமும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பது எமக்கு கவலையளிக்கின்றது. எமது கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படும் என தேர்தல் காலங்களில் வாக்குறுதி வழங்கப்பட்டும் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்ததன் விளைவாகவே நாங்கள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். எங்களுடைய கோரிக்கைகளை அனைத்து தரப்பினருக்கும் தெரியப்படுத்தி விட்டோம். ஆனால் தீர்வு மட்டும் கிடைப்பதாக இல்லை. எமது கோரிக்கைகள் அரசால் தீர்த்து வைக்கக் கூடியவை. எனவே எங்களுடைய கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்குமாறு அரசையும் உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையும் கேட்டு நிற்கின்றோம் - என்றுள்ளது. (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன தே.எண்ணெய் விநியோகிக்கப்படவில்லை

அரசு அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 31
புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோ கிக்கப்பட வில்லை என்று அரசு அறிவித்துள்ளது.
4 இறக்குமதி நிறுவனங்களால் நாட்டுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்துள்ளது என்று தர நிர்ணய நிறுவனம் உறுதி செய்துள்ளது. அதனால் அவற்றை சந்தைக்கு விநியோகிக்க வில்லை. இறக்குமதி செய்யப்பட்ட நாட்டுக்கே அதனைத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்த தேங்காய் எண்ணெய் நாடளாவிய ரீதியில் விற்பனைக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.
நுகர்வோர் அதிகார சபை, சுகாதார அமைச்சின் உணவுப்பொருள்கள் பாதுகாப்பு பிரிவு மற்றும் தர நிர்ணய நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்கள் அது தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளன. இனிமேல் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருள்களதும் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
எவ்வாறெனினும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் நாட்டின் 25 மாவட்டங்களில் தற்போது விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார். (க-இ)

# தேங்காய் எண்ணெய் இறக்குமதி; தொடர்புடையோரை தூக்கிலிடுக

கூறுகிறார் பெரமுன எம்.பி.

கொழும்பு,மார்ச் 31
மக்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய தேங்காய் எண்ணெய், நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையால், அதனுடன் தொடர்புடைய அனைவரும் தூக்கிலிடப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார்.
மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.
தேங்காய் எண்ணெய் என்பது நாம் நேரடியாக உட்கொள்ளும் ஒரு பண்டமாகும். பெரும்பாலானோருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதமாக செயற்பட்ட சந்தேகநபர்கள் அனைவரையும் தூக்கிலிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# மனைவியைக் கொலை செய்து நீர்த்தேக்கத்தில் வீசிய கணவன்

ஹற்றன்,மார்ச் 31
கணவன் மற்றும் மனைவிக்கு இடையில் இடம்பெற்ற தர்க்கம் காரணமாக மனைவியை கணவன் தாக்கிக் கொலை செய்துள்ளார். சடலத்தை பின்னர் தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வீசியுள்ளார். கடந்த 25 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட பெண் தொடர்பான மேலதிக விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. அக்கரபத்தனை, டொரிங்டன் தோட்டத்தைச் சேர்ந்த, இரு பிள்ளைகளின் தாயே சடலமாக மீட்கப்பட்டார்.
பொலிஸார் மேற்கொண்ட தொடர் விசாரணையில், கணவரே அவரை கொலை செய்து சடலத்தை நீர்த்தேக்கத்தில் வீசியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.
சந்தேக நபரான கணவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (க-இ)

# மாகாண சபைத் தேர்தல் பின்னடிக்கிறார் கோத்தா

அமைச்சரவைப்பத்திரமும் கிடப்பில்

கொழும்பு,மார்ச் 31

**மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவை பத்திரத்தை கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.**

அதனால் அமைச்சரவைப் பத்திரத்தை நிறைவேற்றிக் கொள்வதை ஒத்திவைப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.
ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான புதிய சட்டவரைவு அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்தச் சட்ட வரைவுக்கு அமைவாக, 70 வீதமானோர் தொகுதி வாரியான முறைமைக்கும், 30 வீதமானோர் விகிதாசார முறைமையின் கீழும் உறுப்பினர்களைத் தெரிவுச் செய்வதற்கு அமைச்சரவையில் தமது இணக்கப்பாட்டைத் தெரிவித்திருந்தனர்.
எனினும் தொகுதிவாரி முறைமையின் கீழ் ஒரே கட்சியைச் சேர்ந்த மூவர் தெரிவு செய்யப்படுவதற்கு அமைச்சரவையின் சில உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.
குறித்த யோசனை தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்தை எடுக்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்று அறிய முடிகின்றது. (க-இ)



# பால் உற்பத்திப்பொருள் தொடர்பில் பயிற்சி நெறி

மாந்தை, மார்ச் 31
மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் கிராம சக்தி திட்டத்தின் கீழ், உற்பத்திக் கிராமமாகிய கரும்புள்ளியான் கிராமத்தில் பால் சார் உற்பத்திப் பொருள்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதற்கான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பால் உற்பத்திப் பொருள்கள் தயாரிப்பைக் கிராம சக்திக் குழுவினர் ஆரம்பித்துள்ளனர். (ந-9)

# தண்ணீர் நெருக்கடியில் ஒதியமலை கிராம மக்கள்

தீர்வு தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 31
முல்லைத்தீவு ஒதியமலைக் கிராம மக்கள் தண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். குறித்த கிராமத்தில் 80 குடும்பங்கள் வாழ்கின்றனர். கடந்த காலங்களில் அங்கு செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளிடம் தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு மக்கள் பலமுறை கோரிக்கை முன்வைத்துள்ளனர். கடந்த ஆட்சிக் காலத்தில் இக்கிராமத்தில் குடிதண்ணீர் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது வறட்சிக் காலம் என்பதால் ஒதியமலைக் கிராமத்தில் தண்ணீர் நெருக்கடி அதிகரித்துள்ளது. இதனால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் என்பவை தண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒதியமலை மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-13)

# பெண் பிரதிநிதிகள் 25 வீதமாவது இலங்கை அரசியலில் வேண்டும்

வவு.உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகள் கோரிக்கை

வவுனியா, மார்ச் 31
இலங்கையில் இடம்பெறும் தேர்தல்களில் பெண் பிரதிநிதிகளுக்கு 25 வீதமாவது ஒதுக்கீடு வேண்டும் என்று வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.
வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்கள்:
உள்ளூராட்சி மன்றங்களில் 25 வீதமான இட ஒதுக்கீட்டை பெண்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் 2018ஆம் ஆண்டு சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், குறித்த 25வீத ஒதுக்கீட்டை முழுமையாக பெற்றுக் கொள்வதிலும் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. வவுனியா மாவட்டத்தில் மொத்தமாக 25 பெண் பிரதிநிதிகள் உள்ளனர். இது மொத்த உறுப்பினர்கள் தொகையில் 22 வீதமாகும். இந்நிலையில் பெண் பிரதிநித்துவத்தை ஊக்குவிக்கும் முகமாக பெண் வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் திட்டத்தை நாம் கட்சி பேதமற்ற முறையில் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். 2018 ஆண்டு சட்ட மூலம் அமுலுக்கு வந்ததன் பின்னர் அரசியலில் பிரவேசிக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது. பெரும்பாலான பெண்கள் இதனை ஒரு மகத்தான வாய்ப்பாகக் கருதினாலும் சில பெண்கள் சட்ட நிர்ப்பந்தத்தால் சந்தர்ப்பவசமாக அரசியலில் பிரவேசித்தனர். என்றாலும் மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் அரசியலில் களமிறங்கி பிரதிநிதிகளாகச் செயற்பட்டு பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட பின்னர் பெண் அரசியல் பிரதிநித்துவத்தின் தேவையை அனுபவரீதியாக உணர்ந்துள்ளோம். நாம் அரசியலில் ஈடுபட்ட பின்னர் மக்கள் அபிவிருத்திக்காக குரல் கொடுக்கும் சந்தர்ப்பமும், பெண்களை பாதிக்கும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய இடங்களில் பேசும் வாய்ப்பும் எமக்கு கிடைத்துள்ளது ஆகவே எதிர்கால தேர்தல்களில் பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அரசியலில் பெண்கள் இருப்பது பெண்களின் உரிமையைப் பாதுகாக்கவும் பெண்களைப் பாதிக்கும் விடயத்தில் தீர்மானம் எடுக்கவும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வன்முறையற்ற சூழலை உறுதிப்படுத்தவும் இது தேவையாக இருக்கின்றது என்றனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது தடுப்பூசியால் 80 வீதமானவருக்கு பலன்




கொழும்பு,மார்ச் 31

**இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்டாஜெனகா தடுப்பூசியின், முதலாவது டோஸைப் பெற்றுக் கொண்டவர்களில், 80 வீத மானவர்களுக்கு அதனால் அதி கூடிய பலன் கிடைத்துள்ளது.**

இந்தத் தகவலை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழக மருத்துவபீடத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் ஆய்வுகூடத் தலைவரான மருத்துவர் சந்திம ஜீவந்திர தெரிவித் துள்ளார்.

புதிதாக நடத்தப்பட்ட பரிசோதனைகள் மூலம் இந்தத் தகவல் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும், முதலாவது டோஸை செலுத்தினால் போதுமானது என்று எவரும் கருதக் கூடாது. கொவிட் 19 தொற்று நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்துக் கொள்வதற்கு இரண்டாவது டோஸூம் எடுக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## கண்ணீர் அஞ்சலி



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் பரம்பரை ஆதீன பிரதம குரு, ஸ்வர்க்கிய ஸ்ரீ சிவாகம ஞானபானு சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களின் பாரியார்

**ஸ்ரீமதி லலிதா அம்மா**

அம்பிகையின் பாதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா நாகம்மையின் திருவடிகளையடைய அஞ்சலி செய்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள் குடும்பத்தவர்கள்
நயினாதீவு, சுதுமலை.**

## மரண அறிவித்தல்

**திருமதி சிவமணி காந்தமூர்த்தி**

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.எஸ்.கார்த்தி கேசு (ஆசிரியர்) திருமதி கண்மணி கார்த்திகேசு தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கமலம் ஆகியோரின் அன்பு மருமகளும், அமரர் காந்தமூர்த்தியின் பிரிய மனைவியும், சிவகாந்தன், கைலைவாசன் ஆகியோரின் தாயாரும் ஆகிய சிவமணி காந்தமூர்த்தி அவுஸ்திரேலியாவில் நேற்று (30.03.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார் என்பதை அறியத் தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

# சிசுவின் உடல் தகனம்; நீதிமன்று ஆராயும்

கொழும்பு,மார்ச் 31

கொரோனாத் தொற்றால் உயிரிழந்த சிசுவின் உடலைத் தகனம் செய்தமையைச் சவாலுக்கு உட்படுத்தி, சிசுவின் பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு குறித்து எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி ஆராயப்படும் என்று உயர்நீதி மன்ற நீதியரசர்கள் குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாமின் ஒருவரான நீதியரசர் யசந்த கொட்டகொட குறித்த நீதியரசர் குழாமிலிருந்து நேற்று முன்தினம் விலகினார்.

இந்த மனு, நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, எல்.டி.பீ.தெஹிதெனிய, காமினி அமசேகர மற்றும் குமுதினி விக்ரமசிங்க ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் அழைக்கப்பட்டது. அதில் மனுவை ஆராயத் திகதி குறிக்க ப்பட்டது. மொஹமட் ஃபாருக் மொஹமட் பாஹிம் மற்றும் பாத்திமா ஷஃப்னாஸ் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில், தமது சிசுவுக்கு கொரோனா தொற்றிருந்தமை தொடர்பில், மருத்துவமனை நிர்வாகத்தால் எந்தவித ஆவணங்களும் வழங்கப்படவில்லை. தமது சம்மதமின்றியே சடலம் தகனம் செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)



# இரசாயன தே.எண்ணெய் 27,500 லீற்றர் பறிமுதல்

கொழும்பு,மார்ச் 31

நச்சு இரசாயன பதார்த்தம் அடங்கியுள்ளது என்று சந்தேகிக்கப்படும் 27 ஆயிரத்து 500 லீற்றர் தேங்காய் எண்ணெய் கொண்ட இரண்டு பவுசர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. 119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து, தங்கொட்டுவப் பகுதியில் வாகனங்கள் சோதனையிடப்பட்டன.

இரண்டு பவுசர்கள் கைப்பற்றப்பட்டன. வாகனங்களின் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டனர்.

இருவரும் ராகமவில் உள்ள ஒரு கிடங்கிலிருந்து தேங்காய் எண்ணெய்யை இரண்டு பவுசர்களில் தங்கொட்டுவ ஆலைக்கு எடுத்து வந்தனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்யின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க -இ)

# தீயில் எரிந்த மூதாட்டி சாவு

அம்பாறை,மார்ச் 31

தனக்குத் தானே மண்ணெண்ணெய்யை ஊற்றி தீ மூட்டிய மூதாட்டி, சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. விநாயகபுரம் காளிகோவில் வீதியைச் சேர்ந்த 76 வயதுடைய முத்துச்சாமி கருப்பாயி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் பல்வேறு நோய்களால் அவதிப்பட்டு வந்த நிலையில், தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 07.04.2021 அன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| இல | இலக்கம் | வயது | மாடுகள் |
|---|---|---|---|
| 01 | 4303-0919-0004 | 09 வருடங்கள் | பசு |
| 02 | 4303-0919-0006 | 09 வருடங்கள் | பசு |
| 03 | 4303-0919-0034 | 5 வருடங்கள் & 5 மாதங்கள் | பசு |
| 04 | 4303-0919-0036 | 6 வருடங்கள்& 4 மாதங்கள் | பசு |
| 05 | 4303-0919-0041 | 4 வருடங்கள் & 6 மாதங்கள் | நாம்பன் |
| 06 | 4303-0919-0045 | 4 வருடங்கள் & 4 மாதங்கள் | பசு |
| 07 | 4303-0919-0057 | 3 வருடங்கள் & 5 மாதங்கள் | பசு |
| 08 | 4303-0919-0063 | 3 வருடங்கள் & 2 மாதங்கள் | கன்னிப்பசு |
| 09 | 4303-0919-0064 | 3 வருடங்கள் & 2 மாதங்கள் | பசு |
| 10 | 4303-0919-0067 | 2 வருடங்கள் & 7 மாதங்கள் | நாம்பன் |
| 11 | 4303-0919-0068 | 2 வருடங்கள் & 6 மாதங்கள் | நாம்பன் |
| 12 | 4303-0919-0070 | 2 வருடங்கள் & 5 மாதங்கள் | நாம்பன் |
| 13 | 4303-0919-0071 | 2 வருடங்கள் & 5 மாதங்கள் | நாம்பன் |
| 14 | 4303-0919-0072 | 2 வருடங்கள் & 5 மாதங்கள் | நாம்பன் |
| 15 | 4303-0919-0074 | 2 வருடங்கள் & 4 மாதங்கள் | நாம்பன் |
| 16 | 4303-0919-0075 | 2 வருடங்கள் | நாம்பன் |
| 17 | 4303-0919-0076 | 1 வருடங்கள் & 11 மாதங்கள் | கன்னிப்பசு |
| 18 | 4303-0919-0082 | 1 வருடங்கள் & 4 மாதங்கள் | நாம்பன் |
| 19 | 4303-0919-0094 | 4 மாதங்கள் | நாம்பன் கன்று |
| 20 | 4303-0919-0095 | 4 மாதங்கள் | நாம்பன் கன்று |
| 21 | 4303-0919-0098 | 2 மாதங்கள் | நாம்பன் கன்று |
| 22 | 4303-0919-0099 | 2 மாதங்கள் | பசுக்கன்று |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 05.04.2021 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்ட பின்னர் மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 இனைச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்குகொள்ள முடியும். ஏலவிற்பனைக்கு வருகை தரும்போது பற்றுச்சீட்டை கொண்டு வருதல் அவசியமானதாகும். ஏலவிற்பனையானது 07.04.2021 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்

பதிவாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

மணிவிழாவும் சேவைநயப்பும்

Best Wishes

யா/கொடிகாமம்
திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை
ஆசிரியர்
திருமதி இகபரேஸ்வரி யோகராசா



அவர்கள் தமது 28 வருட ஆசிரிய சேவையாற்றி
இன்றுடன் ஓய்வு பெறுகின்றார்.

மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்

அன்னையாய் நீரும் எம் மழலைகளை ஏற்றீர் !
அன்பாய் நிறைந்து உள்ளம் கவர்ந்தீர் !
அவசியம் உணர்ந்து கொடைகள் புரிந்தீர் !
அகவை அறுபதில் மணிவிழா கண்டீர் !

Congratulations

ஆற்றிய சேவைகள் ஆயிரம் ஆயிரம் !
அழியா ஒளியால் இதயத்தில் நிறைந்தே !
போற்றிட வார்த்தைகள் மொழியில் இல்லையே !
ஊற்றதாய் உவகையும் நிறைந்து நீடூழி வாழ்கவே !
காலங்கள் யாவுமே வசந்தங்கள் வாழ்த்தட்டும் !

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை


### வெளிநாட்டு ஆசையால்

# பறிபோனது ரூ. 3 லட்சம்

சாவகச்சேரி மார்ச். 31

வெளிநாட்டுக்கு அனுப்புகிறேன் எனக் கூறி தென்மராட்சி பிரதேத்தைச் சேர்ந்த பெண்ணொருவரிடம் 3 லட்சம் ரூபாவை கொழும்பைச் சேர்ந்த ஒருவர் ஏமாற்றிப் பெற்றுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகநூலின் மூலம் அறிமுகமான அந்த நபர் கடந்த சில மாதங்களாக ஐ.எம்.ஓ என்ற சமூக ஊடகம் ஊடாக குறித்த பெண்ணுடன் உரையாடி வந்துள்ளார். வெளிநாட்டுக்கு அனுப்பும் ஆசையை பெண்ணின் மனதில் உருவாக்கிய அவர் வெளிநாடு செல்வதாயின் முகவருக்கு பணம் செலுத்த வேண்டும் என்றும் தனது வங்கிக் கணக்குக்கு 2 லட்சம் ரூபா அனுப்புமாறும் கேட்டுள்ளனர். பெண்ணும் அதனை நம்பி பணத்தை அனுப்பியுள்ளார். தொடர்ந்து கொரோனாவால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் பணம் அனுப்புமாறு அந்த நபர் கேட்டதற்கு இணங்க இரு தடவைகள் தந்தை மூலம் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் அனுப்பியுள்ளார். அதன் பின்னர் குறித்த நபர் பெண்ணுடனான தொடர்பைத் துண்டித்ததையடுத்து பாதிக்கப்பட்ட அந்தப் பெண் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (வ-9)

# அபிவிருத்திகளில் அரசு பின்னடைவு

### ஒரு செங்கல்லையும் நடவில்லை என்கிறது ஐ.ம.ச.

கொழும்பு.மார்ச் 31


தற்போதைய அரசு அனைத்து அபிவிருத்தி முயற்சிகளிலும் பின்னடைவிலேயே இருக்கின்றது. ஆனால் தேர்தல் காலத்தில் நாமே ஆளும் தரப்பில் உள்ளோம். எம்மால் தான் மக்களுக்குப் பணியாற்ற முடியும் என்றனர். ஆனால், இரண்டு வருடங்கள் கடந்தும், கண்டி மாவட்ட அபிவிருத்திச் செயற்பாடு ஒன்றுக்குக் கூட ஒரு செங்கல்கானும் பதிக்கப்படவில்லை. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவருமான வேலுகுமார் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் பஹத்த ஹேவாஹெட காரியாலயத் திறப்பு நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கண்டி மாவட்டத்தில் பல ஆண்டுகள் தேங்கிக் கிடந்த உரிமை சார் பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தோம்.

அதே போன்று, புறக்கணிக்கப்பட்டிருந்த தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தியில் எழுச்சியை ஏற்படுத்தினோம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் வீடமைப்புக்கான காணி வழங்கல் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு இணைந்ததாக தனி வீட்டுத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. அவற்றில் பல வீட்டுத் திட்டங்கள் எமது காலப்பகுதியில் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டன. எமது அரசின் நிர்வாகம் முடிவுக்கு வந்த தருணம் பல வீடுகள் பாதியளவில் பூர்த்தியான நிலை யில் இருந்தன. ஆனால் இன்று இரண்டு வருடங்கள் கடந்தும் அவை அதே நிலையிலேயே உள்ளன. அவற்றின் அபிவிருத்திக்காக ஒரு சதமேனும் நிதி ஒதுக்கப்படவில்லை.

தோட்ட மக்களை ஏமாற்றி, காணி தருகின்றோம், எனக் கூறிக் கொண்டு, தமது சகாக்களுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுக்க அரச தரப்பு பிரமுகர்கள் மாவட்டம் முழுவதும் அலைந்து திரிகின்றனர். என்றார். (க-இ)



# நுளம்புகளுக்கும் கருத்தடை

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் முதன் முறையாக ஒரு லட்சம் நுளம்புகள் கருத்தடை செய்யப்பட்டு, சூழலில் விடப்பட் டுள்ளன. டெங்கு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறு கருத்தடை செய்யப்பட்டுள்ளது என்று தேசிய டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு மருத்துவர் அருண ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் ஆண் நுளம்புகளுக்கே இவ்வாறு கருத்தடை செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டம் ஹம்பகாவில் உள்ள கிடகமுல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. களனிப் பல்கலைக்கழக மருத்துவபீடமும், தேசிய நுளம்பு கட்டுப்பாட்டுப் பிரிவும் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்தன. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மன நிம்மதி கூடும். நல்லவர்களின் ஆதரவு கிடைப்பதால் மனம் நிம்மதி பெறும். பொருளாதார வளர்ச்சி திருப்தி தரும். செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவும் நாள். தேவையற்ற பயங்களைத் தூக்கிப்போடுங்கள். யோகம் வரும். பணிச்சுமை அதிகரித்தாலும் நிறைவு வரும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டம் கதவைத் தட்டும்போது பயன்படுத்துங்கள். குடும்பத்தில் நன்மை நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். சொத்துகளால் ஆதாயம் கிடைக்கும். நிம்மதி மீளும்.

**கடகம்:** தாராளமாகச் செலவிட்டு மகிழ்வீர்கள். குதூகலம் நிறையும். புதிய தொழில் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வீர்கள். பழைய கடன்களைக் கொடுத்து மகிழும் வாய்ப்புக் கிட்டும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். பெற்றோரின் ஆசிகள் பெறுவீர்கள். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கன்னி:** இன்று பரிசுகளையும், பாராட்டுகளையும் பெறுவீர்கள். வயதில் மூத்தவர்களின் அன்பும், ஆதரவும் மகிழ்ச்சியளிக்கும் வாழ்க்கைத்துணை வழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள்.

**துலாம்:** வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் எளிதாக சமாளிப்பீர்கள். கையிருப்பு கூடும். உறவினருடன் கசப்பாகப் பேசாதீர்கள்..

**விருச்சிகம்:** தவறுக்கு வருந்துவீர்கள். அவசியமற்ற செலவு வேண்டாம். சகோதர சகோதரியிடம் கடுமையாகப் பேச வேண்டாம். விரிவாக்கம் பற்றி சிந்திப்பீர்கள்.

**தனுசு:** புதிய கலையைக் கற்கும் ஆர்வம் ஏற்படும். கவலை தீரும். திட்டமிட்ட விஷயங்களில் சிறிதளவு மாற்றம் செய்வீர்கள். வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வீர்கள்.

**மகரம்:** கடன் வாங்கும் எண்ணத்தை கை விடுவது நல்லது. வாகன சேர்க்கை உண்டு. மருத்துவ செலவு ஏற்படலாம். மன நிறைவு வரும். வழக்குகளைத் தள்ளிப் போடுங்கள்.

**கும்பம்:** புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். வருத்தங்கள் நீங்கும். உறவினர்கள் வருகை இன்று உண்டு. மனம் நிறையும். அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொள்வீர்கள்.

**மீனம்:** கைமாற்று கொடுக்கவோ, வாங்கவோ வேண்டாம். விவாதத்தால் நட்பு, பகையாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அக்கம் பக்க வீட்டாரின் நட்பு பெருகும்.

# தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லை

## பி.சி.ஆர்.கட்டாயம்

கொழும்பு,மார்ச் 31

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள், ஏற்கனவே கொரோனாவைத் தடுப்பதற்கான தடுப்பூசியைச் செலுத்தியிருப்பின், அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்குத் தொற்று இல்லையென்று உறுதிப்படுத்தப்பட்டால், சமூகத்துடன் இணைய அனுமதிக்கப்படுவர்.

இவ்வாறு கொவிட் 19 நோய்த் தொற்றைத் தடுக்கும் தேசிய செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாடு திரும்புவோருக்கு பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று இல்லையென முடிவுகள் கிடைத்தால், அவர்கள் வருகை தந்த 2 ஆம் நாள், சமூகத்துடன் இணைய முடியும். இருப்பினும் வெளிநாட்டவர்களுக்கு வெவ்வேறு வகையான தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன. அதனால் 7 ஆவது நாளில் பி.சி. ஆர் பரிசோதனை முடிவு திருப்திகரமாக இருந்தால், அவர்கள் தனிமைப்படுத்தல் பகுதியில் இருந்து வெளியேறலாம் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# 2 ஆவது டோஸ் ஏப்ரல் 19. ஆரம்பம்

கொழும்பு,மார்ச் 31

ஒக்ஸ்போர்ட்அஸ்ட்ராஜெனெகா கொவிட்ஸ் ஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டவர்களுக்கு, இரண்டாவது டோஸை செலுத்தப் போதுமான தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன. அதற்கமைவாக பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தலைமை தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (க-இ)

# கொரோனாத் தொற்றைக் கண்டறிய இலகு பரிசோதனை

கொழும்பு, மார்ச் 31

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டறிவதற்கு இலகுவான பரிசோதனை முறைமை ஒன்றை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக நிபுணர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர். விரல் நுனியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் ஒரு துளி குருதி இந்தச் சோதனைக்கு போதுமானதாக இருக்கும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

3ஆயிரம் குருதி மாதிரிகள் பெறப்பட்டு அவற்றிலிருந்து இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆய்வில் இலங்கையிலிருந்து சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவத்துறைப் பேராசிரியர் நீலிகா மளவிகே பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

# மத்திய மாகாணத்தில் 7,823 பேருக்கு கொரோனா

கொழும்பு,மார்ச் 31

மத்திய மாகாணத்தில் இதுவரை 7ஆயிரத்து 823 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 8 பேருக்கும், நுவரெலியாவில் ஆயிரத்து 573 பேருக்கும், மாத்தளையில் ஆயிரத்து 142 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்திலேயே அதிகமானோருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக கண்டி மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் 567 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரையில் கண்டி மாவட்டத்தில் 55 பேரும், மாத்தளையில் 11 பேரும் நுவரெலியாவில் 1 பேரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# தவக்கால சிந்தனை

## கிறிஸ்தவத்தை வாழும் மக்களாவோம்

முப்பது வெள்ளிக்காசுக்காக பிரபராதி யேசுவை முத்தமிட்டுக்காட்டிக்கொடுத்தான் துரோகச்சீடன் யூதாஸ் ஸ்காரியோத். இதனால் காட்டிக்கொடுக்கும் கும்பலின் தலைவனானான்.

முப்பதாயிரம் தருகிறேன். கடவுளை எனக்குக் காட்டிக்கொடுங்கள் என்ற வேடிக்கையான வேண்டுகோள் இன்றும் பலர் மனதின் கேள்விகளாகவுள்ளன. ஏனெனில் அன்று யூதாஸ் பிடித்துக்கொடுத்த பின்பு இன்றும் உலகம் கடவுளைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறது. யூதாசைப் பழிகூறும் நாம் எந்த விதத்தில் குறைந்து விட்டோம் என்று கேட்குமளவிற்கு கடவுள் எம் வாழ்வில் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறார்.

இன்று நாம் அவர் கற்பித்த விழுமி யங்களைக் காட்டிக்கொடுக்கின்றோம். ஏதோ பிறந்தோம் வளர்ந்தோம் இறந்தோம் என்று வாழ்வது அல்ல வாழ்வு. நாம்சாதிக்க வேண்டியவை என்ன? எப்பொழுது எந்த அளவு? என தீர்மானித்து செயற்பட வேண்டும். எமது வாழ்வு வழியாக இயேசுவைப் பிரதிபலிக்க முடியாமைக்கு நாமே பொறுப்பாகும். கடவுளின் பிம்பங்களாக நாம் திகழவே இறையுருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டிருக்கிறோம்.

இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாசைப் பற்றியே பேசி அவன்மீது பழி சுமத்துவதை விடுத்து இன்று இயேசுவை காட்டிக்கொடுக்கப்படுவதற்கு யார் காரணம் என்பதைச் சிந்திப்போம். இயேசுவை கடவுள் என அறிக்கையிடும் வாழ்வு முறைகளால் சான்று பகரும் கிறிஸ்தவர்களாக வாழ வரம்வேண்டுவோம். காட்டிக்கொடுப்பதை விடுத்து கண்டடையும் மக்களாவோம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பண்டத்தரிப்பு சாந்தையில், சாந்தை பிறிமியர் லீக் கிறிக்கெற் போட்டித் தொடரில் பங்குபற்றும் வீரர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய)

# காணியில் தற்காலிக வீடு இருந்தாலே வீடமைப்புத் திட்டத்துக்கு அனுமதியாம்

## ■ அதிகாரிகள் விதண்டாவாதம் ■ பயனாளிகள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

வீடற்றவர்களுக்கு அரசால் வழங்கப்படும் நிரந்த வீட்டுத் திட்டத்தைப் பெறவேண்டுமாக இருந்தால், பயனாளிகள், தமது காணிகளில் தற்காலிகக் கொட்டகைகளை அமைத்து அதில் வாழவேண்டும், என்றும், வாடகை வீடுகளில் வசித்துக்கொண்டு, வீடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்க முடியாது என்றும் வீட்டுத் திட்டங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



வீட்டுத் திட்டங்களைப் பெறுவதற்கான தகுதிகள் அனைத்தும் இருந்த போதும், காணியில் தற்காலிக வீடுகள் இல்லை என்று தெரிவித்து, பல பயளாளிகள் வீட்டுத்திட்டங்களில் புறக்கணிப்பட்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.

வலி வடக்கு பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் பாதுகாப்புத் தரப்பால் கையகப்படுத்தப்பட்டுள்ள வீடு ஒன்றின், உரிமையாளர்களான குடும்பம் ஒன்று, சொந்த வீட்டுக்குத் திரும்ப முடியாதலால், வாடகை வீட்டில் வசித்து வருகின்றனர். நீண்ட காலத்தின் பின்னர் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து, தமக்கான வீட்டுத் திட்டம் கோரி கடந்த 2019ஆம் ஆண்டு கோப்பாய் பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்திருந்தனர். வீட்டுத்திட்ட தெருவில் குறித்த குடும்பத்தின் பெயர் உள்ளடக்கப்பட்டது. எனினும், கோப்பாய் பிரதேச செயலகத்தால் தயாரிக்கப்பட்ட இறுதிப் பட்டியலில் குறித்த குடும்பத்தின் பெயர் நீக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.

"குறித்த குடும்பம் தான் கொள்வனவு செய்த காணியில் தற்காலிக வீடு அமைத்து குடியமராததால், மேலதிகாரிகளின் பரிந்துரையில் அவர்களுடைய பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்று கிராமத்துக்குப் பொறுப்பான துறைசார்ந்த அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறான நடைமுறை அமைச்சு மட்டத்தில் வழங்கப்படுகிறதா? என ஆராய்ந்த போது திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டவர் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த கூடிய தயார்படுத்தலில் இருந்தால் அவரை சிபாரிசு செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் யாழ். மாவட்டச் செயலர் க. மகேசனை தொடர்பு கொண்டு கேட்டபோது;

வீட்டுத் திட்டம் தொடர்பான பல முறைப்பாடுகள் தனக்கு கிடைக்கிறது எனவும் அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசில், வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டபோது, தற்காலிக கொட்டில்களில் இருந்த மக்கள், அவற்றைப் பிடுங்கி, நிரந்தர வீடுகளை அமைக்க முற்பட்டனர். எனினும் ஆட்சிமாற்றத்தின் பின்அந்தவீடுகளுக்கான மிகுதிப் பணம்இதுவரைவழங்கப்படாததால், அவர்கள் இருப்பதற்கு இடமின்றி இன்னல்படுவது குறிப்பிடத்தக்கது. (ப-159)

## கும்பாபிஷேகம்

கொடிகாமம், மார்ச் 30

கைதடி வீரகத்தி பிள்ளையார் கோவில் வீரகஜமுக புஷ்கரணி தீர்த்தக் கேணியின் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் காலை 6.11 தொடக்கம் 7.41 வரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது.

இந்த கும்பாபிஷேகத்தில் அடியவர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ற-159)

## மோ.சைக்கிள் நாயுடன் மோதியதில் இருவர் காயம்

சாவகச்சேரி மார்ச் 31

மோட்டார் சைக்கிளுடன் வீதியின் குறுக்கே வந்த நாய் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவிலில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஒருவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ச- 9)

# யாழில் பொருள்களுக்கு தட்டுப்பாடு வரலாம்!!!

## வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாண நகர் மற்றும் திருநெல்வேலி நகர் பகுதியில் மொத்த விற்பனை நிலையங்கள் முடக்கப்பட்டுள்ளமையால் சில நாள்களில் குடாநாட்டில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு வரக்கூடும் என்று யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலையங்கள் முடக்கப்பட்டுள்ளமையால் ஏற்படப்போகும் பாதிப்புத் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாண நகரில் மொத்த விற்பனை நிலையங்களை உள்ளடக்கிய பகுதியே முடக்கப்பட்டுள்ளது. அதேபோன்று திருநெல்வேலியிலும் மொத்த விற்பனை நிலையங்கள் முடக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக குடாநாட்டு சில்லறை வர்த்தகர்களுக்கு இன்னும் சில நாள்களில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம்- என்றார். (ஒ.5)

## சாவ. பொதுச் சந்தையில் சுகாதார விதிமுறை கட்டாயம்!

### *நகரசபைத் தவிசாளர் வலியுறுத்து*



சாவகச்சேரி, மார்ச் 30

சாவகச்சேரி நகரசபையின் பொதுச்சந்தைக்கு வருவோர் கட்டாயம் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது,

சந்தைக்குள் நடமாடும் வியாபாரிகள், நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகியோர் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

சந்தை நுழைவாயில்களில் கை கழுவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அனைவரும் கைகழுவிய பின்னரே சந்தைக்குள் உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.

வியாபாரிகள் அடிக்கடி கைகளைக் கழுவி வியாபாரத்தில் ஈடுபடல் வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் முகக்கவசம் அணியாமல் வியாபாரத்தில் ஈடுபட முடியாது. அவ்வாறு ஈடுபடுவார்களாயின் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்படுவர்.

இந்த நடவடிக்கைகளை பொலிஸாரும் சுகாதார பகுதியினரும் கண்காணிக்கவுள்ளனர். எனவே அனைவரும் சுகாதார விதிமுறைகளைப் பேண வேண்டும் என்றார். (ற-9)





யாழ்ப்பாணம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 15 கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக சேகரிக்கப்பட்ட 500 கிலோ புத்தரிசி 'அக்ர சக்ய ஜெய்ரீ மகா போதிக்கு' செலுத்துவதற்கு நேற்றைய தினம் யாழ்ப்பாண கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து சம்பிரதாய பூர்வமாக அநுராதபுரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசறை வீதியால் பயணிப்பதற்கு 21 பஸ்களுக்கு தடையுத்தரவு

பதுளை.மார்ச் 31

பதுளை பசறை வீதியால் பயணிக்கும் 21 பஸ்களுக்கு, பதுளை மோட்டார் வாகனத் திணைக்களத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பதுளை மோட்டார் வாகன திணைக்களப் பரிசோதகர் குழுவினர், பொலிஸாருடன் இணைந்து நேற்று வாகனப் பரிசோதனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இ.போ.ச. பஸ்கள் 8, தனியார் பஸ்கள் 13 உள்ளிட்ட 21 பஸ்களுக்கு வீதிகளில் பயணிக்க தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பஸ்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மீள் பரிசோதனைக்குட்படுத்திய பின்னர் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை பசறை வீதியில் அண்மையில் இடம்பெற்ற கோர விபத்தில் 14 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



## முடக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உதவி வழங்கக் கோரிக்கை

நல்லூர்,மார்ச் 31

**கொரோனாத் தொற்றால் முடக்கப்பட்டுள்ள திருநெல்வேலி மத்தி வடக்கு கிராம சேவையாளர் பிரிவு குடும்பங்களுக்கு உதவி வழங்க முன்வருமாறு, நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. மயூரன் தமிழ் உறவுகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.**

திருநெல்வேலி சந்தை மற்றும் அதனைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், 127 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 51 பேர் திருநெல்வேலி மத்தி வடக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்கள். அதனை அடுத்து குறித்த கிராம சேவையாளர் பிரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் முடக்கப்பட்டுள் ளது. அந்தப் பகுதியில் ஆயிரத்து 100 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க உறவுகள் முன்வர வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (க-இ)

## போதை ஒழிப்பு அதிகாரிகளுக்கு ஏப்ரல் 12 வரை மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 31

போதைப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் அதிகாரிகள் 15 பேர் உட்பட 30 சந்தேகநபர்கள் எதிர்வரும் 12ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்தால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களை கடத்தல்காரர்களுக்கு விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கடந்த வருடம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த வழக்கு கொழும்பு, பிரதம நீதிவான் புத்திக முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (வ-இ)






## கிளிநொச்சியிலும் நேற்று உறவுகள் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

ஒவ்வாரு மாதம், 30ஆம் திகதியும் இந்த உறவுகள் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையிலேயே நேற்றும் அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்த னர். கிளிநொச்சி உறவுகளால், ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் நேற்று 863 நாள்களை கடந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-6)



வேலணையில் பொருண்மியம் நலிந்த நிலையில் வாழும் இரு குடும்பங்களுக்கு ஆறாயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்களும், மண்டைதீவு மக்களுக்கு பயன்தரு மரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியுதவியை யாழ் சுதுமலையைச் சேர்ந்தவரும் பிரிட்டனை வதிவிடமாகக் கொண்டவருமான சாய் சச்சின் தேவா என்பவர் தனது பிறந்த தினத்தை முன்னிட்டு வழங்கியிருந்தார். (வ-319)

## பொன்னாலை துறை சந்தையில் வெளியிடத்து மீன்கள் விற்பனை;

### தொழிலாளர் வியாபாரிகளிடையே முறுகல்

பொன்னாலை, மார்ச் 31

வெளிப் பிரதேச மீன்களை பொன்னாலை துறைக்குள் உள்ள சந்தையில் விற்பனை செய்யக்கூடாது என்று தொழிலாளர்கள் தடைவிதித்ததால், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களும் இடையில் நேற்று முறுகல் நிலை ஏற்பட்டது.

வெளியிடங்களில் இருந்து மீன்களைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள், அவற்றை பொன்னாலை துறைச் சந்தையில் விற்பனை செய்வதால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது, அவ்வாறு வெளிப் பிரதேசங்களில் கொள்வனவு செய்த மீன்களை விற்பனை செய்ய வேண்டும் என்றால் பத்து மணிக்கு பிறகு குறித்த சந்தையில் விற்பனை செய்ய வேண்டும் என்று பொன்னாலைக் கடலில் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் தெரிவித்தனர். அதற்கு மறுப்பு தெரிவித்த வியாபாரிகள் தாங்கள் பத்து மணிக்கு பின்னர் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்றும் அந்த நேரத்தில் மக்கள் வரமாட்டார்கள் என்றும் கூறியதால் முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் குறித்த பகுதிக்கு வந்த பிரதேச சபையின் செயலாளர், பிரதேச சபையின் வட்டார உறுப்பினர்கள், கிராம அலுவலர் மற்றும் நீரியல்வளத் திணைக்ள கள உத்தியோகத்தர் ஆகியோர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பொன்னாலை துறையில் பிடிக்கப்படும் மீன்களையே சந்தையில் விற்பனை செய்யவேண்டும் என்று தெரிவித்த பிரதேச சபையின் செயலர், வெளிப் பகுதி மீன்களை குறித்த சந்தையில் விற்பனை செய்வது தொடர்பில் பிரதேச சபையில் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். இதனை அடுத்து (ப-27)

## சஹ்ரானுடன் தொடர்புடைய 64 பேருக்கு தொடர் மறியல்

கொழும்பு,மார்ச் 31

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலில் பிரதான குற்றவாளி, சஹ்ரானுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 69 பேரில் 64 பேருக்குத் தொடர்ந்தும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காகச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். 58 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுடன் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலயத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார், சீயோன் தேவாலயத் தற்கொலைக் குண்டுதாரிக்குப் பயணம் செய்ய பஸ்ஸில் ஆசனப் பதிவு செய்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களைக் கொண்ட 69 பேரின் வழக்குகள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. பிணையில் விடுவிக்கப்பட்ட 5 பேரும் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

ஏனைய 64 பேரும் காணொளி மூலம் முற்படுத்தப்பட்டனர். மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.ஏ றிஸ்வான் 64 பேரையும், எதிர்வரும் [illegible] திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பட்டியலில் உள்ளோருடன் தொடர்புபேணினால் கைதாவீர்கள்!

## மிரட்டுகிறது கோத்தா அரசு

**கொழும்பு, மார்ச் 31**

**இலங்கை அரசால் தடை செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அமைப்புக்களுடன் யாரேனும் தொடர்புகளை வைத்திருந்தால் அவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படுவார்கள் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாக இந்த எச்சரிக்கையை விடுத்தனர்.

இலங்கை அரசால் 360 தனி நபர்கள் மற்றும் 7 அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான வர்த்தமானி இரண்டு நாள்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலரால் வெளியிடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் மற்றும் இஸ்லாமிய பயங்கரவாதக் கொள்கைகளைப் பரப்புவர்கள் என்ற அடிப்படையிலேயே இந்தத் தடைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது என்றும், இவர்களுடன் தொடர்புகளைப் பேணுபவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவர் என்றும் அரசு அறிவித்துள்ளது. (ஒ.இ)

# உளவுத் தகவல்களை பாகிஸ்தானும் வழங்கியதாம்

### ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடவுள்ளார் எனச் சந்தேகிக்கப்பட்ட ஒருவரின் ஒளிப்படம் மற்றும் விவரங்களை 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கை அரசுக்கு பாகிஸ்தான் வழங்கியுள்ளது. அது தொடர்பில் அப்போதைய அரசு கவனம் செலுத்தவில்லை. இவ்வாறு ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திடம் இந்த விவரங்களை பாகிஸ்தான் கையளித்துள்ளது.

ஆயுதப் பயிற்சி குறித்த கையேடு, குண்டு வெடிக்க வைக்கும் திட்டங்கள், இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி வெடிபொருள்களை உருவாக்கல் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய விவரங்களை பாகிஸ்தான் கையளித்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய தீவிரவாதிகளுக்கும், பாகிஸ்தான் அடையாளப்படுத்தி வழங்கிய தீவிரவாதிக்கும் இடையில் தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்று ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.இ)

## தனி அலகாகும் துறைமுகநகர்

கொழும்பு.மார்ச் 31

சீன அரசின் முதலீட்டில் கொழும்பில் அமைக்கப்படும் துறைமுகநகருக்கு பல விலக்களிப்புக்களை வழங்கி தனி அலகாக நிர்வகிப்ப தற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் நாடாளுமன்றத்தில் அண்மையில் சமர்பிக்கப்பட்டது. இதிலேயே இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவே துறைமுக நகரை நிர்வகிக்கும். இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள 7 சட்டங்களிலிருந்து துறைமுக நகருக்கு விலக்களிக்கப்படும். இதன் மூலம் துறைமுக நகரை தனி அலகாக நிர்வ கிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

# சந்தஹிரு சேயா தூபிக்கு இரத்தினங்கள் நன்கொடை

கொழும்பு.மார்ச் 31

போரின்போது உயிரிழந்த வீரர்களின் நினைவாகக் கட்டப்படும், சந்தஹிரு சேயா தூபிக்கு, 200 மில்லியன் ரூபா மதிப்பிலான இரத்தினங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இரத்தின வியாபாரிகள் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள நன்கொடையாளர்கள் ஒன்றிணைந்தே இவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராஜாங்க அமைச்சர் லோகன் ரத்வத்தேவின் அறிவுறுத்தலின் பேரில், இரத்தினம் மற்றும் நகை ஆணையகத்தின் தலைவர் திலக் வீரசிங்க, குறித்த இரத்தினங்களை பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவிடம் ஒப்படைத்துள்ளார். (க-இ)

# எரிபொருள் இறக்குமதியால் அரசுக்கு இலாபமே மிச்சம்

### விலையை அதிகரிக்க அவசியமில்லை என்கிறார் கபீர்

கொழும்பு.மார்ச் 31

கொரோனாத் தொற்றுக் காலத்தில் நாட்டில், எரிபொருள் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் அரசுக்கு 25 ஆயிரம் கோடி ரூபா இலாபம் கிடைக்கப் பெற்றது. எனவே தற்போது எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் கிடையாது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் தெரிவித்தார்.

2019, 2020 ஆம் ஆண்டுகளில் உலக சந்தையில் பெற்றோல் மற்றும் டீசல் விலை வீழ்ச்சியடைந்தபோது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்ட 25 ஆயிரம் கோடி ரூபா இலாபத்தின் மூலம் தற்போதேனும், நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இந்த இலாபத்தைச் சேமிப்பிலிட்டு உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போது. இலங்கையின் விலையை அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார். எனினும், தற்போது எரிபொருள் விலையை அதிகரிக்க நேரிடும் என்று அவரே கூறுகின்றார்.

எனவே, இவ்வாறான பின்னணியில் எரிபொருள் விலையை அதிகரிக்க எவ்வித அதிகாரமும் அரசுக்குக் கிடையாது. என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# அசாத்தை விடுவிக்க ரிஷாத்தும் கோரிக்கை



கொழும்பு.மார்ச் 31

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலியை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன்வேண்டு கோள் விடுத்துள்ளார்.

அசாத் சாலியை விசாரணை செய்து, அவர் தவறிழைக்காவிட்டால் உடனடியாக விடுதலை செய்யுங்கள். சமூகத்துக்காக கருத்து தெரிவித்தார் என்பதற்காக, அவரின் குரல்வளையை நசுக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம்.

அவரைத் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்திருப்பது தர்மமும், நீதியும் அல்ல. அவர் சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகளுக்காக ஓயாது குரல் கொடுத்தவர். குறிப்பாக, ஜனாஸா அடக்கம் செய்யும் முயற்சிகளுக்கும் எங்களுடன் இணைந்து போராடினார். எனவே அவரை அநியாயமாக பழிவாங்க வேண்டாம் என்று ரிஷாத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலும் அசாத் சாலியை விடுவிக்கக் கோரி, பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. (க-இ)

# நீதி வழங்கும் பொறிமுறை அரசிடம்; வீதியில் போராடும் உறவுகள் வெறுப்பு

வவுனியா.மார்ச் 31

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வழங்கும் பொறிமுறையை சர்வதேசம் இலங்கையிடமேயே ஒப்படைத்திருப்பதானது, தொடர்ந்தும் எமக்கான நீதி கிடைக்கப் போவதில்லை என்பதையே கூறுகிறது என்று, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வவுனியா மாவட்ட உறவுகள் தெரிவித்தனர்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தால் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்த ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;




எமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களுக்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் எமக்கான நீதியை இதுவரை எந்த ஒரு அரசும் வழங்கவில்லை. எமது உறவுகளைத் தருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் இந்தப் போராட்டங்களை இடைநிறுத்தப்போவதில்லை.

சர்வதேச நீதியை எதிர்பார்த்தே நாம் போராடிவருகிறோம். குற்றம்செய்த குற்றவாளிகளிடமிருந்து நீதி கிடைக்கும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும். நீதியை வழங்கும் பொறிமுறையை சர்வதேசம் இலங்கையிடம் வழங்கியிருப்பது மிகவும் வேதனையான விடயம். எனவே எமது துன்பங்களை தீர்த்து வைப்பதற்கான சர்வதேச நீதியை எதிர்பார்த்து நாம் காத்திருக்கிறோம் - என்றனர். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்நிதிக் கடனை நிறுத்தக் கோரி வடமாகாணத்தில் போராட்டங்கள்!

**யாழ்ப்பாணம், மார்ச் 31**

**நுண்நிதி கடனை நிறுத்தக் கோரியும் பெண்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்களை வெளிப்படுத்தியும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் கவனவீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**

நுண்நிதிக் கடனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 8 ஆம் திகதி ஹிங்குராங்கொடவில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டத்துக்கு ஆதரவாக இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.




**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டச் செயலக முன்றலில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நுண்நிதிக் கடனால் பாதிக்கப்பட்ட மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

புதுக்குடியிருப்பு நகரில் வடக்கு மாகாண மக்கள் திட்ட ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யுவசக்தி பெண்கள் அமைப்பால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து நுண்கடன்களையும் நிறுத்தவும், கொள்ளைக்கார நுண்கடன் பற்றி கடன் கணக்கு பரிசோதனை செய்யும் வரை கடன் மீள அறவிடுவதை இடைநிறுத்தவும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிதி முறைமையொன்றை உருவாக்கவும் என கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் முன்வைத்தனர்.

**வவுனியா**

நுண்கடன் கம்பனிகளிடம் சித்திரவதைப்படும் பெண்களின் கடன்களை அரசே தள்ளுபடி செய்யவேண்டும் எனக் கோரி வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வடக்கு மாகாண மக்கள் திட்டமிடல் மன்றத்தின் ஏற்பாட்டில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாடுபூராகவும் 28 லட்சம் பெண்கள் நுண்நிதி கம்பனிகளின் கடன் சுமையில் சிக்கித்தவிக்கின்றனர். கஇதனால் மனமுடைந்த பெண்கள் பலர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.


நாம் வாக்குப் போட்ட அரசியல்வாதிகள் அனைவரும் எம்மை கைவிட்டநிலையில் நுண்கடன் கம்பனிகளின், வசைபாடல்களுக்கு இன்று இரையாகியுள்ளோம். கிராமங்களுக்குள் மோட்டார்சைக்கிள் வந்தாலே நாம் பயந்து ஒழிய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனவே எமது கடன்கள் அனைத்தையும் அரசு தள்ளுபடி செய்யவேண்டும். என்றனர்.

**கிளிநொச்சி**

நுண்நிதிக் கடனை நிறுத்தக் கோரி கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பகுதியிலும் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போராட்டம், முழங்காவில் சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு, முழங்காவில் தேசிய பாடசாலை வரை சென்றது.

**மன்னார்**

மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவும் நுண்நிதிக் கடனால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். மன்னார் மாவட்ட வளர் பிறை பெண்கள் அமைப்பு, மன்னார்மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவை இணைந்து இவ் போராட்டத்தை முன்னெடுத்தன. (ஐ-19,110, 60,213,6)



# 66 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 66 பாடசாலை மாணவர்களுக்கு தலா 3ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கருகம் பனை இந்து இளைஞர் கழகமும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையமும் இணைந்து முன்னெடுக்கும் விதையனைத்தும் விருட்சமே செயற்திட்டத்தின் கீழ் இவை வழங்கப்பட்டுள்ளன. (வ-19)



# பஸ் பழுதடைந்ததால் யாழ். வந்த பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இ.போ.ச பஸ் சில்லு ஒன்றில் காற்று வெளியேறியதன் அதில் பயணித்த பயணிகள் அசௌகரியங்களைச் சந்தித்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது. மன்னார், பஸ் தரிப்பிடத்தில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இலங்கை அரச போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் பயணித்தவர்களே இவ்வாறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. ஜெயபுரம் பகுதியில், பஸ்ஸின் சக்கரத்திலிருந்து காற்று வெளியேறியமையால் அந்த பஸ்ஸில் பயணித்த பயணிகள் வீதியில் இறக்கப்பட்டனர். நீண்ட நேரத்தின் பின்னர், அவர்கள் பிறிதொரு பஸ்ஸில் யாழ்ப்பாணம் வந்தனர். குறித்த அரச பஸ் நீண்ட தூரப் பயணத்துக்கு உகந்தது அல்ல எனவும், அதில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும் பயணிகள் விசனம் தெரிவித்தனர். (ப-56)

# முறையற்ற மண் அகழ்வுக்கு மன்னார் மாவட்டத்தில் தடை

மன்னார், மார்ச் 31

மன்னார் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் முறையற்ற மணல் அகழ்வுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மாவட்ட ரீதியில் சட்ட விரோத மண் அகழ்வுகள் இடம்பெறும் இடங்களை உரிய திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து களப் பயணம் மேற்கொண்டு பார்வையிடப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மண் அகழ்வு தொடர்பான சட்ட அமுலாக்க கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடை பெற்றது. இதன்போது மண் அகழ்வு தொடர்பில் தெளிவு படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மணல் அகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டதுடன், நபர் ஒருவருக்கு வழங்கும் மண் அனுமதிப்பத்திரத்தை வரையறுப்பதுடன், அத்தியாவசியதேவைகளுக்கு மாத்திரம் மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்படும் எனவும். அதே நேரம் உரிய கன்காணிப்பின் பின்னர் உரிய திணைக்களங்களால்மண் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)



மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் பிரதேச மக்களுக்கான பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான முதற்கட்ட நடமாடும் சேவை கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது. அப்ரியல் நிறுவனம் மற்றும் ஒபர் சிலோன் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகத்தின் பங்குபற்றுதலுடன் இந்த சேவை முன்னெடுக்கப்பட்டது. (வ-9)

# கண்ணகைபுரம் கிராமத்தில் உப உணவுச் செய்கை மேம்படும்

## மாவட்ட ஒருங்கிணைப்பு குழு நடவடிக்கை

கண்ணகைபுரம் கிராமத்தின் உப உணவுப் பயிர்ச்செய்கையை மேம்படுத்த கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. உழுந்து மற்றும் பயறு உள்ளிட்ட சிறுதானியங்கள், வெங்காயச்செய்கை மற்றும் மரக்கறிச் செய்கை என பல்வேறு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் கண்ணகைபுரம் கிராம மக்கள், தமது விவசாய உற்பத்திகளுக்கான போதிய சந்தைவாய்ப்பைப் பெற முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு கொரோனா நெருக்கடி உச்சமாக இருந்த காலப்பகுதியில் இந்தக் கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பலநூறு கிலோகிராம் நிறையுடைய பூசணிக்காய் உரிய சந்தைவாய்ப்பு இல்லாத காரணத்தால் பெருமளவில் நாசமடைந்தது. இதனால், பூசணிச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பை எதிர்கொண்டனர். இவ்வாறான நிலையில், கண்ணகைபுரம் கிராமத்துக்கான பயிர்ச் செய்கை நீர்வழங்கல் கூட்டம் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் சிறிமோகனன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டன. இதன்போதே உபஉணவுப் பயிர்ச் செய்கையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ட-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா தீர்மானத்தை நியாயப்படுத்தும் எந்தவொரு கருத்தையும் ஏற்கமாட்டோம்

## இலங்கை அரசு மீண்டும் திட்டவட்டம்



**கொழும்பு, மார்ச் 31**
**ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நியாயப்படுத்துவதற்காக முன்வைக்கப்படும் எந்தவொரு கருத்தையும் நாம் ஏற்கமாட்டோம் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.
இதன்போது பொலிஸ் அதிகாரியால் சாரதியொருவர் வீதியில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன? பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்பதற்கு இவ்வாறான சம்பவங்களே சான்றாக அமைகின்றன. இவற்றை அடிப்படையாக வைத்துத் தானே ஜெனிவாவில் குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்படுகின்றன எனவும் எழுப்பட்ட கேள்விகளுக்குபதிலளிக்கையிலேயேஅமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்பது வார்த்தைகளில் அல்லாது செயலில் காட்டப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள் ளார். இவ்வாறான நடவடிக்கைகளை அரசு ஒரு போதும் அனுமதிக்காது.
அமெரிக்காவில் கடந்த வருடம் பொலிஸ் அதிகாரியொருவர், கறுப்பினத்தவர் ஒருவரைக் காலால் அமுக்கி கொலை செய்தார். உலகளவில் பொலிஸ் அதிகாரிகளால் தவறுகள் இடம்பெறுகின்றன. அது அரசுகளின் தவறு கிடையாது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால்தான் அது தவறாக அமையும்.
மேற்குலக நாடுகள் எதிர்பார்ப்பது போல அரசு செயற்படாததால்தான் ஜெனிவாவில் தீர்மானம் வருகின்றது. இலங்கைக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளே முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் அதிகார பூர்வமாக நிராக ரித்துள்ளோம். எனவே, குறித்த தீர்மானத்தை நியாயப்படுத்துவதற்காக முன்வைக்கப்படும் எந்தவொரு கருத்தையும் அரசு ஏற்காது - என்றார். (ஒ.44)

# தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு,மார்ச் 31
பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்த ஞாயிறு தின விசேட ஆராதனைகளை முன்னிட்டு, தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவால், உரிய பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள் முதல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் வரை, விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.
ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படும் தேவாலயங்களின் மதகுருமார்களுடன் கலந்துரையாடி, பெரிய வியாழனான ஏப்ரல் முதலாம் திகதி ஆராதனை முதல் ஏப்ரல் 4 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தின ஆராதனை வரை பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும், புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து தேவாலயங்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (க-இ)

# நாடுமுழுவதும் திரையிடப்படும் நாடக விழாவின் நாடகங்கள்

## அமைச்சர் நாமல் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 31
இளைஞர் நாடக விழாவையொட்டி நாடு முழுவதும் பல நாடகங்கள் திரையிடப்பட்டு சர்வதேச கண்காட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
41ஆவது தேசிய இளைஞர் நாடக விழா அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியிலும் இந்த ஆண்டு தேசிய இளைஞர் நாடகப் போட்டிக்கு 16 நீண்ட நாடகங்கள், 96 சிங்களகுறு நாடகங்கள் மற்றும் 10 தமிழ் குறு நாடகங்கள் மாகாண ஆகியவை மட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.
இந்த நிலையில் இறுதி சுற்றுக்கு 7 சிங்கள மொழி நாடகங்கள், 12 சிங்களகுறு நாடகங்கள் மற்றும் 2 தமிழ் நாடகங்கள் ஆகியவை தெரிவு செய்யப்பட்டுள்ளன.
கொரோனாத் தொற்று காலப்பகுதியில் நாடகத்துறை வீழ்ச்சியடைந்திருக்கும் நேரத்தில், இளைஞர் நாடக விழாவை வலுவூட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மூலம் கலைத்துறை தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும், மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் வாய்ப்புக் கிடைத்தி ருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது - என்றார். (ஐ-இ)

# ஏப்.21. தாக்குதல் விவகாரத்தில் அரசியல் தலையீடு வேண்டாம்

## நியாயம் கோரும் குழு வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 31
உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான நடவடிக்கைகள் சுயாதீனமாக முன்னெடுக்கப்படுவதை சீர்குலைக்க, அரசியல் தலையீடு செய்ய வேண்டாம் என்று உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கான நியாயம் கோரும் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.
இது தொடர்பில் அக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக பாகுபாடின்றி தயங்காமல் துரிதமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களை முழுமையாகத் தடை செய்து, அவர்களுடன் தொடர்புடைய வெளிநாட்டு அனுசரணையாளர்கள் மற்றும் வெறுப்புணர்வைத் தூண்டும் உள்நாட்டவர்களை அடையாளம் கண்டு, அவர்களை இந்த நாட்டிலிருந்து நாடு கடத்த வேண்டும்.
**சிலரால் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன எனக் கூறப்படும் ஆயுதங்களைக் கைப்பற்றுமாறும், தீவிரவாதத்துக்கு ஊக்கமளித்த நபர்களது பணம் மற்றும் அசையும், அசையாச் சொத்துக்களை அரச உடமைகளாக்குமாறும் கோருகின்றோம். இந்தக் கோரிக்கைகளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடைகின்ற எதிர்வரும் 21 ஆம்** திகதிக்கு முன்னர் செயற்படுத்துமாறும் வலியுறுத்துகின்றோம்.
குறைந்தபட்சம் தண்டனையைச் செயற்படுத்துவதற்குரிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையாவது மேற்கொள்ள வேண்டும்.
நாட்டில் இடம்பெறும் ஏனைய குற்றங்கள் தொடர்பாக குற்றவியல் விசாரணைத் திணைக்களம் மற்றும் ஏனைய உளவுத்துறை ஆகியவை தேடுதல்களை நடாத்தி துரிதமாக குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களைத் தேடிச் செல்லும் நிலை காணப்படுகிறது.
எனினும், 269 பேரை ஈவிரக்கமின்றி கொலை செய்து, 300 க்கும் மேற்பட்டோரை ஊனமுற்றவர்களாக்கி, பெரும் அழிவை உண்டாக்கியவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்க, சம்பவம் இடம்பெற்று இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இது வரை இயலாமல் போயுள்ளமை புதிராகவே உள்ளது. இதனால் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் செயற்படும் நிறுவனங்களுக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா? என்ற அச்சம் எழுந்துள்ளது என்றுள்ளது.
கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மெக்ஸ்வெல் ஜி சில்வா ஆண்டகை, அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அருட்பணி கெமிலஸ் பெர்னாண்டோ, அருட்பணி சாந்த சாகர ஹெட்டியாராச்சி, அருட்பணி லோரன்ஸ் ராமநாயக்க மற்றும் அருட்பணி டெனின்டன் சுபசிங்க ஆகியோரின் கையொப்பங்களுடன் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (க-இ)

# சந்திரிகாவுக்கு பாதுகாப்பில்லை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமாயின், அதற்கானபொறுப்பை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.
சந்திரிகாவின் வீட்டுக்குள் இனந்தெரியாத நபர்கள் அண்மையில் நுழைந்துள்ளனர். அதுவும் சந்தேகத்துக்கு இடமானது. சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. லசந்த விக்கிரமதுங்கவுக்கு இடம்பெற்றதைப் போன்று, சந்திரிகாவுக்கும் நடக்க இடமளிக்க முடியாது. அவருடைய பாதுகாப்பு பலவீனமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# அனைத்து மாவட்டங்களிலும் தே.எண்ணெய் பரிசோதனைக்கு

அனைத்து மாவட்டங்களிலும் தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று இலங்கை தரச்சான்றுகள் நிறுவகம் தெரிவித்துள்ளது.
இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய எப்லடொக்சின் காசினோஜென் இரசாயனம் அடங்கியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.
அதனடிப்படையில் தரமற்ற தேங்காய் எண்ணெய் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தலா 5 மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபையால் மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.
அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட 100 மாதிரிகள் ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் குறித்த இரகசிய ஆவணம் பிரிட்டனிடம் உள்ளது

## கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 31**

**இலங்கையில் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றது என்று கூறப்படும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து பிரித்தானியாவிடம் இரகசிய ஆவணமொன்று உள்ளது என்று கல்வி அமைச்சரும் சட்ட மேதையுமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புதிய தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது நாட்டை இலக்கு வைத்து ஐ.நா கட்டமைப்பின் சட்டங்களை மீறி முன்னெடுக்கும் நடவடிக்கைகளை நாம் நிராகரிப்பதுடன், எமது நாட்டுக்கு ஆதரவளித்த நாடுகளுடன் இணைந்து எமது நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். போரின் இறுதிக்கட்டம் குறித்து உண்மையைக் கண்டறிய 2.8 மில்லியன் டொலர்களை செலவழிப்பதற்கு பிரித்தானியாவுக்கு எந்த அவசியமும் இல்லை. அவர்களிடமே சாட்சியங்களும் உள்ளன. போரின் இறுதிக்கட்டத்தில் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மே மாதம் 19ஆம் திகதிவரை முழுமையான அறிக்கையொன்றை பிரித்தானிய அதிகாரி ஒருவர் தயாரித்துள்ளார். அவர் கொழும்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் பணிபுரிந்தவர். போரின் நடவடிக்கை குறித்து முழுமையான அறிக்கையை பிரித்தானியாவுக்கு அனுப்பிவைத்தலே அவருக்கு வழங்கப்பட்ட கடமையாகும். அந்த அறிக்கை இன்றும் உள்ளது. குறித்த அறிக்கையில் எந்தக் குற்றமும் படையினரால் இழைக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சட்டத்தின் முன் எந்த பிழையும் ஏற்படவில்லை என அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார். இலங்கை குறித்த விவகாரம் பற்றி பேசுகையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இப்படிப்பட்ட பெறுமதியான சாட்சியங்கள் அடங்கிய அறிக்கையை சமர்பிக்க வேண்டும். தாருஸ்மன் என்பவர் ஐ.நா பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர். குறித்த அமைப்பானது தனக்கு ஆலோசனை வழங்கவே நியமிக்கப்பட்டது என்று பான் கீ மூன் என்னிடம் தொலைபேசியில் தெரிவித்திருந்தார். இலங்கைக்கு எதிராக 4 ஆயிரம் சாட்சியங்களைப் பெற்றுக்கொண்டோம் என்றும் 2 ஆயிரத்து 300 பேரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது என்றும் சாட்சியங்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்றன என்றும், அவை 2031ஆம் ஆண்டுவரை அமுலில் இருக்கும் என்றும் தாருஸ்மன் தெரிவித்திருக்கின்றார். ஆகவே இந்த விடயத்தை குறுகிய அரசியல் நோக்கை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் நாட்டின் படையினர் ஆகியோர் உட்பட நேரடியாகத் தாக்கம் செய்யும் நிலைமை என்பதால் ஓரணியில் திரண்டு நடவடிக்கை எடுப்போம் என்றார். (ப)

# ராஜபக்ச அரசிடம் இனவாதம் அதிகம்

## சாடுகிறார் ரிஷாத்

கொழும்பு,மார்ச் 31

இனவாதத்தையும், இனக்குரோத சிந்தனையையும் முதலீடாகக் கொண்டே ராஜபக்சவினர் இன்னமும் அரசியலில் நீடிக்கின்றனர். அவர்கள் நாட்டையோ, மக்களையோ, பொருளாதாரத்தையோ பெரிதாகக் கருதவில்லை.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் இளைஞர் அணியின் கொழும்பு மாவட்ட "இளைஞர் மாநாடு" மட்டக்குளியில் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறுபான்மைச் சமூகங்களை அடக்கியாள்வதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருந்த இனவாத சக்திகள், ஈஸ்டர் தாக்குதலை அரசியல் ஆதரவை ஈட்டத்தக்க கருவியாகத் தொடர்ந்தும் பாவித்து வருகின்றனர். இதிலுள்ள பின்புல சக்திகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே நிரபராதிச் சமூகங்களின் எதிர்பார்ப்பாகும்.

அரசியல் இருப்பை மீண்டும் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இனவாத சக்திகள் எங்களை மையமாக வைத்து, அரசியல் செய்து மீண்டும் ஆட்சியைப் பெற்றுக் கொண்டனர்.

சிறுபான்மை சக்திகளை ஒடுக்குவதும், கட்சித் தலைமைகளின் குரல்வளையை நசுக்குவதும், அதன்மூலம் தமது இலக்கை அடைவதுமே இவர்களின் நீண்டகாலத் திட்டம்.

அமைச்சர்கள் சிலர் தினந்தோறும் இஸ்லாத்தைப் பற்றியும், முஸ்லிம்கள் பற்றியும் புனித வேதமான அல்குர்ஆன் பற்றியும் பொய்யான கருத்துக்களை அப்பாவி மக்கள் மத்தியில் பரப்புகின்றனர்.

தீவிரவாதத்தை இந்த நாட்டில் தூண்டுவதற்கு வித்திட்டவர்கள் இவர்கள் தான். மனித நாகரீகத்துக்கு அப்பாற்பட்ட படுபாதகச் செயலை முஸ்லிம் சமூகம் ஒரு போதுமே அங்கீகரிக்கவில்லை.

இன நல்லுறவையும், நல்லிணக்கத்தையும் தமது அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் இந்தச் சமூகம் தீவிரவாதத்துக்கும், பயங்கரவாதத்துக்கும் ஒரு போதுமே துணைபோனதாக வரலாறு இல்லை. -என்றார். (க-இ)

# அபிவிருத்தி என்ற பெயரில் அழிக்கப்படும் வளங்கள்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



அம்பாறை, மார்ச் 31

வடக்கு கிழக்கு மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற ஆளும்தரப்பினர், அபிவிருத்தி என்ற போர்வையில் எமது பிரதேசங்களின் வளங்களை தொடர்ச்சியாக அபகரித்து வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அபிவிருத்தி என்ற போர்வையில் எமது பிரதேசங்களின் வளங்கள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்திலும் இல்மனைட் பிரச்சினை பெரிய அளவில் பேசப்பட்டு வருகிறது.

எமது வடக்கு கிழக்கு மக்களை ஏமாற்றி கடந்த காலத்திலே வாக்குகள் பெற்ற ஆளுந்தரப்பு அரசியல் பிரமுகர்கள் இது தொடர்பில் குரல் கொடுத்தனர் என்று தெரியவில்லை. -என்றார். (ஐ-இ)

# பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆட்சியில் முன்னேற்றம்

## பெருமிதம் கொள்கிறார் மைத்திரி

பண்டாரநாயக்க குடும்பம் நாட்டை ஆண்ட காலப்பகுதிகளில் இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகம் பெருமளவில் அறிந்து கொண்டது. நாடும் முன்னேற்றமடைந்தது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவால் 1951 ஆம் ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பொதுச்செயலாளர்களாக சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூவர் நியமிக்கப்பட்டனர். அவரைத் தொடர்ந்து ஆட்சி பீடம் ஏறிய சிறிமாவோ பண்டாரநாயக்கவும் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். அந்தக் காலப்பகுதியில் முதலாளித்துவ நாடுகளுக்கும், சோசலிச நாடுகளுக்கும் இடையில் யார் அதிகாரத்தைக் கைப்பற்றுவது? என்ற அதிகாரப்போட்டியொன்று காணப்பட்டது. அதன் காரணமாகவே எஸ். டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்கவால் அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு இயங்கக்கூடிய வகையிலான வெளிநாட்டுக் கொள்கை பேணப்பட்டது. இந்த நிலையில், எமது நாட்டின் பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காணும் நோக்கிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே நாம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்குகின்றோம். கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்றிட்டங்களைத் தயாரிக்கும் பணிகளையும், கட்சியின் உபகுழுக்களிடம் கையளித்துள்ளோம். -என்றார். (க-இ)

# ராஜபக்சக்களுக்கு ஜால்ரா அடித்து இனத்துக்கே துரோகம் செய்யாதீர்!

## சந்திரகாந்தனை சாடுகிறார் பிரதேசசபை உறுப்பினர்

கொழும்பு, மார்ச் 31

நாடாளுமன்றம் சென்று விட்டால் எதை வேண்டுமானாலும் கதைக்க முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான்(சி.சந்திரகாந்தன்) நினைத்து விடக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் வாகரைப் பிரதேசசபை உறுப்பினர் எம்.எச். றஹீம் முஹம்மட் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனின் உரைக்கு தனது கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

முதலில் நீங்கள் யார் என்பதை தெரிந்து கொண்டு முஸ்லிம்களுக்கெதிராக குரல்கொடுப்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். கடந்த மூன்று தசாப்த காலமாக விடுதலைப் போராட்டம் எனக்கூறி அப்பாவி தமிழ் மக்களை ஏமாற்றி இளைஞர்களின் உயிர்களைக் காவு கொண்டு இறுதியில் ராஜபக்சகளுக்கு ஜால்ரா அடித்து உங்களது தலைவனைக் காட்டிக் கொடுத்து உங்கள் இனத்துக்கே துரோகம் செய்தது உங்களைப் போன்றவர்கள்தான்.

இந்த நாட்டில் கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்லாது அனைத்துப் பிரதேசங்களிலும் முஸ்லிம்களின் உயிரையும் உடமையும் பறித்து அநாதைகளாக்கியதும் உங்களைப் போன்றவர்கள்தான்.

யுத்தம் என்ற ஒன்றை ஆரம்பித்து பல மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டதும் உங்களைப் போன்றவர்கள் தான். எனவே எமது மார்க்கத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் விமர்சிக்க முன் நீங்கள் சற்று சிந்தியுங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதன் பொய்கை

## காலத்தின் பதிவுகள்

## மேடையேற்றப்பட்டது "களங்கம்" நாடகம்





யாழ்ப்பாணம்,மார்ச் 31

"களங்கம்" திருப்பாடுகளின் நாடகம் மட்டுப்படுத்தப்பட்ட கலைஞர்களைக்கொண்டு சுகாதார விதிமுறைகளுக்கு அமைய கடந்த 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் மேடையேற்றப்பட்டது.

திருமறைக் கலாமன்றத்தால் ஆற்றுகை செய்யப்பட்ட இந்த நாடகம், மன்ற இயக்குநர் தந்தை நீ. மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில், பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரால் நெறியாள்கை செய்யப்பட்டது. (ப)







யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் இந்த ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அண்மையில் இடம்பெற்றது. (ற)

## பண்பாட்டுப் பெருவிழாவும் கலைஞர்கள் கௌரவிப்பும்



பண்பாட்டு பெருவிழாவும், கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றன.

வடக்கு மாகாண கல்வி , பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி . பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்துகொண்டார்.

வடமாகாணத்தில் கலைத்துறைக்கு சிறப்புச் சேவையாற்றி தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு " கலைக்குரிசில் " விருதும் , 14 இளம் கலைஞர்களுக்கு " இளம் கலைஞர் " விருதுகளும், 10 நூல்களுக்கு சிறந்த நூற்பரிசு விருதும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து " யாழ்பாணன் " ஆவணப்பட வெளியீடும் நடைபெற்றது .

இத்துடன் பண்பாட்டலுவல்கள் திணைக்கள தொகுதி வெளியீடுகளான " வடந்தை ' , " பண்பாட்டு மேம்பாட்டுக்கான கலைகள் இருப்பும் எதிர்பார்ப்பும் " , " யாழ்ப்பாண தமிழர் வாழ்வியற் பண்பாட்டு சுவடுகள் 02 " என்னும் நூல்கள் வெளியிடப்பட்டன . (ஐ)



## 'அன்பின் ஒளி வெள்ளம்' இசைத்தட்டு வெளியீடு

கிருபாகரன் மெரினாவின் 'அன்பின் ஒளி வெள்ளம்' இறுவட்டு வெளியீட்டு விழா புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த இறுவட்டை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜோசெப்தாஸ் ஜெபரட்ணம் ஆண்டகை வெளியிட்டு வைத்தார். (ற-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் பதிவுகள்







## கம்பன் விழா வவுனியாவில் கடைப்பிடிப்பு

கவிச்சக்கரவர்த்தி கம்பன் விழா தின நிகழ்வு வவுனியாவில் அண்மையில் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் தலைமையில், வவுனியா நகரப் பகுதியில் உள்ள கம்பனின் உருவச்சிலையடியில் இந்த விழா கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது கம்பனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்ட, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பார்த்தீபனால் சிறப்புரையும் ஆற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் செட்டிக்குளம் பிரதேசசபை தவிசாளர், நகரசபை உறுப்பினர்கள், தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர், கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-110)







அளவெட்டி கும்பலை நரசிங்க வைரவர் ஆலயத்தின் நாத கீதம் என்னும் இறுவட்டு வெளியீடு கோவில் முன்றலில் அண்மையில் இடம்பெற்றது. காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் கலாநிதி கா.பீ. ஜெயவிந்தன் இறுவட்டினை வெளியிட்டார். (9)





## இலக்கிய ஆளுமைகள் நூல் வெளியீடு

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரும், கிண்ணியாவைச் சேர்ந்தவருமான ஏ.ஸீ. எம்.முஸ்இல் எழுதிய 'இலக்கிய ஆளுமைகள்' நூல் வெளியீட்டு விழா கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம அதிதியாக கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி கலந்து கொண்டார்.

## குறும்பட வெளியீடும் சான்றிதழ் வழங்கலும்

"எழுந்திடு" குறும்திரைப்பட வெளியீடும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மன்னார் ஆகாஷ் விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றன.



தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் சமாதானத்துக்கான இளைஞர்களின் ஆற்றுகை ஊடாக தயாரிக்கப்பட்ட குறும்படமே வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது. நிகழ்வில் மன்னார் மாவட்ட ஆயர் கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ, மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலாளர்கள் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் "மதங்களை புரிந்து கொள்ளுதல், முரண்பாட்டை தவிர்த்தல் பால்நிலை தொடர்பான மூன்று மாத பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஜ-213)

## பாடலை மறந்த தேன்சிட்டுக்கள்

### அழிவுக்குச் செல்ல அதுவே காரணம்



பெண் குருவிகளை வசப்படுத்துகின்ற பாடலை ஆண் சிட்டுக்கள் மறந்து விட்டன. அதனால் ஆண் சிட்டுகளுக்கு காதல் பாடல் சொல்லிக் கொடுப்பதற்கு அறிவியலாளர்கள் முயற்சிக்கின்றனர்.

வாழ்விடங்கள் அல்லது வாழ்வதற்கான சூழல் பறிக்கப்படுவதால் பறவை இனங்கள் பலவும் அருகி, மறைந்து வருகின்றன. சின்னஞ்சிறு தேன் உண்ணும் சிட்டுக்கள் ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்ற அரிய பறவை இனங்களில் ஒன்று.

அவை உலகில் இருந்து முற்றாக அழிந்து போகின்ற ஆபத்தில் இருக்கின்றன.

மஞ்சள், கறுப்பு வண்ணம் கொண்ட இந்தக் குருவிகள் பூமியில் ஆக முந்நூறு மட்டுமே உயிர்வாழ்கின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சிட்டுக்களில் ஆண்பறவைகள் பாடுவதை மறந்து அவற்றின் பண்பாட்டை இழந்துவிட்டன என்பதை சூழல் அறிவியலாளர்கள் நீண்ட நாள் ஆராய்ச்சியின் பின்னர் கண்டறிந்துள்ளனர். ஆண் குருவிகளின் பாடல் கேட்டே அவற்றின் மீது மையல் கொண்டு பெண் குருவிகள் இனப்பெருக்கம் செய்கின்றன.

பெண் குருவிகளுக்கு மட்டுமே புரிகின்ற அந்த வித்தியாசமான பாடலை ஆண் குருவிகள் மறந்துவிட்டதால் பெண் சிட்டுக்கள் அவற்றை நெருங்குவதில்லை.

இதனால் இனப்பெருக்கம் தடைப்பட்டு அவற்றின் இனம் அருகி அழிந்து வருகின்றது என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

'பொதுவாக ஆண் குருவிக் குஞ்சுகள் தந்தையிடம் இருந்தே பாடக் கற்றுக் கொள்கின்றன.

தந்தைக் குருவி நேரகாலத்துடன் கூட்டை விட்டு வெளியேறிவிடுவதாலும் அல்லது இறந்து விடுவதாலும் குஞ்சுகள் பாடல் கற்றுக்கொள்ளத் தவறிவிடுகின்றன என்பது அவதானிப்புகளில் தெரிய வந்துள்ளது இந்த உண்மையை உயிரியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

பறவைகளின் சூழலில் பாடலை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் செய்வதன் மூலம் அவற்றை பாடுவதற்குத் தூண்ட முடியும்.

மனிதர்களைப் போன்றே சில பறவை களும் அடுத்தவர் மூலம் கற்றுக் கொள்கின்ற ஆற்றலைக் கொண்டுள்ளன.

கேட்பதன் மூலம் பாடல் பயிற்சியை பெற்றுக்கொள்ள பறவைகளால் முடியும்.

அவற்றின் பண்பாட்டைத் தக்கவைக்கும் இதுபோன்ற முயற்சிகள் மூலம் அரிய உயிரினங்களின் அழிவைத் தடுக்க முடியும் என்று ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தின் அறிவியலாளர் ஒருவர் கூறுகிறார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கிராமியக் கலைகள்

நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகள் மூலம் அறிய முடிகிறது. இக்கலைகளே சமுதாயத்தின்ஆவணமாகத் திகழ்கின்றன. இக்கிராமியக் கலைகளே, தகவல் பரப்பும் ஊடகமாகவும் பழக்கவழக்கப் பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்ந்துள்ளன.

இன்று தொழில் நுட்பத்தின் அசுர வளர்ச்சியான தகவல் தொடர்புக்கும், பொழுது போக்குக்கும் பல்வேறு ஊடகங்கள் உருவாகி வருகின்றன. இம்மாறுதல் இயற்கையானதே. இவற்றை நாம் எளிதில் புறக்கணித்துவிட முடியாது. காலத்துக்கு ஏற்ற மாறுதல்கள் தேவைதான். இதுபோன்று ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கலைகள் உள்ளன. இந்தக் கலைகள் வெளியே தெரியாமல் உள்ளன. மேலும் நாடகம், வீதி நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், பரதநாட்டியம், இசைச் சிற்பம் போன்ற பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.



## கிராமியக் கலைகள்:

### கரகாட்டம்

மாரியம்மனுக்கு ஆடி மாதத்தில் கரகம் எடுப்பது தமிழ் நாடெங்கும் உள்ள வழக்கமாகும். மலர்களைக் கொண்டு அழகான ஒப்பனை செய்யப்பட்ட குடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடும் ஆட்டம் கரக ஆட்டமாகும். இறைவழிபாட்டுடன் தொடர்பு உடையது இந்தக் கலை. பல்வகை வண்ண மலர்களால் போர்த்தப்பட்டு அழகாகச் செய்யப்பட்டிருக்கும். இந்தக் கரகாட்டத்தில் ஆண்கள், பெண்கள் ஒன்றாக ஆடுவது பல அடுக்குகள் கொண்ட கரகத்தைத் தாங்கி ஆடுவது, கரகாட்டத்தின் தனிச்சிறப்பு.

### காவடி ஆட்டம்

காவடியாட்டம் சமய உணர்வுக்காகவும் பொழுது போக்குக்காகவும் நிகழ்த்தப்படுகிறது. காவடி, தண்டைக் கொண்டு ஆடுவதால் இவ்வாட்டம் காவடியாட்டம் எனப் பெயர் பெற்றது. காவடி எடுத்து முருகக் கடவுளை வழிபடும் நிகழ்ச்சியாகக் காவடி ஆட்டம் நடைபெறுவது தமிழர்கள் மரபாகும். காவடியாட்டம் இறைத் தொடர்புடையதாகையால் பல கடுமையான நோன்புகளை மேற்கொண்டு காவடி எடுப்பர். கலைத் திறனும் ஆடல் நுட்பமும் இதில் மிகுதியாக இருக்கும்.

### வில்லுப்பாட்டு

தமிழகத்தில் உள்ள நாட்டுப்புறக் கலைகளில் மிகச் சிறந்தது வில்லுப்பாட்டு. வில்லுப்பாட்டு பிறப்பிடம் குமரி மாவட்டம். வில்லுப்பாட்டின் குறைந்தது ஐந்து பேர் இருப்பர். வில்லுப்பாட்டில் கதைப் பாடல்களைப் பாடிக்காட்டுவார்கள். தலைவர் இருவர் கதையைப் பாட்டாகக் கூறிச்செல்லும்போது, விளக்கவேண்டிய இடத்தில் விளக்கி, உரை நடையாக கூறுவர். தெய்வங்களின் வரலாறு. தெய்வ நிலை பெற்ற வீரர்களின் வரலாறு, அரசர்களின் வரலாறு, இவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறவே வில்லுப்பாட்டு பயன்பட்டது. விழாக்களில் பாடப்பட வில்லுப்பாட்டு, இன்று இலக்கியம், அரசியலுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அரசியல் சமுதாயத் தலைவர்களின் வரலாறுகள் வில்லுப்பாட்டில் இடம் பெறுகின்றன. காந்தி மகான் கதையை, மறைந்த கலைவாணர் பாமர மக்களிடையே பரப்பினார். ஈழத்தில் சின்னமணி வில்லுப் பாட்டால் பிரபலமான ஒரு கலைஞர்.

### தெருக்கூத்து

பிற நாட்டுப்புறக் கலைகளைப் போன்றே இதுவும் தெய்வ வழிப்பாட்டோடு தொடர்பு உடையது. திரௌபதி விழாக்களில், மாரியம்மன் விழாக்களில், சிவன், திருமால், கணேசன், ஆகியோருக்கு எடுக்கப்படும் விழாக்களில் தெருக் கூத்தானது நிகழ்த்தப்பட்டு வருகிறது. கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் நாற்பது கூத்துக் குழுக்கள் உள்ளன. தெருக் கூத்து பார்வையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாறுபட்டு நிகழ்த்தப்படுகிறது. தெருக்கூத்தில் வரும் கதாபாத்திரங்களின் பண்புகளை வண்ணங்களும் ஒப்பனையும் வெளிப்படுத்தும், துரியோதனனுக்கு சிவப்பும், துச்சாதனனுக்கு மஞ்சள், பீமனுக்கு மேகவண்ணமும், கிருஷ்ணனுக்கு பச்சையும், திரௌபதிக்கு இளஞ்சிவப்பும், அர்ச்சுனனுக்கு நீலமும் தீட்டுவர்.

**ஒரு நாட்டின் கலை மற்றும் கலாசாரம் அச்சமூகத்தைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுது போக்குக்காக மட்டுமின்றித் தகவல் ஊடகமாகவும், கலாசாரப் பலகணியாகவும் திகழ்கின்றது.**
**கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடு.குறிப்பாக நாடகக் கலைகள் நமது மண்ணோடு, நம்மோடு தொடர்புடையவை. நமது பாரம்பரியத்தையும் அடி ஆழத்து வேர்களையும் பிரதிபலிப்பவை. கலை, சமூக வளர்ச்சிக்கும், மன எழுச்சிக்கும் சிறந்த கருவி.**

தெருக்கூத்தில் முதன் முதலாக அரங்கினுள் நுழையும் பாத்திரம் கட்டியக்காரன் ஆவான். அவன் கூத்தின் நடுநாயகமான பாத்திரமாகி, அரசனைப் புகழ்பவனாகவும், தூதுவனாகவும், வேலைக்காரனாகவும், கோமாளியாகவும், பொது மக்களுள் ஒருவனாகவும், மாறிமாறிப் பாடுவான்.

கூத்தைத் துவக்கி, காட்சிகளை விளக்கி, கதைகளைத் தெரியப்படுத்தி, அறிவுரைகளை தூவி, காலநேரச் சூழல்களை முறைப்படுத்தி, வாழ்த்துக் கூறுவதுடன் கூத்தை முடிக்கும் பலவேலைகளையும் செய்கின்றவனாக கட்டியக்காரன் தெருக்கூத்தில் இடம் பெறுகிறான். கூத்தின் இறுதிக்கட்டம் பொது வசனம், முடிவுப்பாட்டு, மங்களம் பாடுவதோடு முடியும். தெருக் கூத்தானது இவ்வாறு அனைத்து நாட்டுப்புற கலைகளுக்குச் சிறப்பு ஏற்படுத்துவதைக் காணலாம்.

### பொம்மலாட்டம் (பாவைக்கூத்து)

பொம்மைகளை வைத்து நிகழ்த்துவதால் பாவைக் கூத்து எனப்படுகிறது. பொம்மைகள் தோல் பொம்மைகள், மண் பொம்மைகள் என இருவகைப்படும். தமிழ் நாட்டில் இக்கலை தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படுகிறது. பாவைகளை மரத்தாலும், தோலாலும் செய்து நூல்களைக் கட்டி ஒரு திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் ஆடியசைத்துக் கதைகளை விளங்கச் செய்யும் நாட்டுப்புறக்கலைக்கு "பாவைக் கூத்து" எனப்பெயர். மரப்பாவைகள் நல்ல ஆடைகள் அணிவிக்கப் பெற்றிருக்கும். தரையில் புரளுமாறு ஆடைகள் பெரிதாக இருக்கும். காண்பதற்கு கால்களே இல்லாமல் மனப்பாவனையில் கால்கள் உள்ளது போல் காட்டப்படும். கயிறுகள் இன்றி பொம்மைகள் தாமே, இயங்குவதாக மனத்தோற்றத்தை முழுமையாகத் தோற்றுவிக்கிறபோது அது கலையாகி விடுகிறது.

### சிலம்பாட்டம்

சிலம்பம் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் சிலம்பம் சிறப்புற்று விளங்கினாலும், குமரி மாவட்டத்தின் சில பகுதிகளில் விளையாடும் சிலம்பாட்டமே சிறப்பானது. இதில் கம்பிகளைக் கொண்டு ஒலியெழுப்பி விளையாடுவர். இக்கலையைப் பயிற்றுவிக்கும் செயலைக் "களிரிப்பயிற்று" என்று கூறுவர். புத்த சமயத்துறவிகள் மூலம் இந்தப் போர்க்கலை சீனா, ஜப்பான் நாடுகளுக்குச் சென்றது என்பர் வரலாற்று ஆசிரியர்கள். இக்கலை சிறந்த மாற்றங்களுடன் ஜப்பான் நாட்டில் கராத்தே என்று அழைக்கப்படுகிறது.

### பொய்க்கால் குதிரை

புராணக் கதைகளைப் பொய்க்கால் குதிரை ஆட்டத்தின் மூலம் நடித்துக் காட்டுவதுண்டு. தஞ்சையை ஆண்ட மராட்டியர்களால் இக்கலை சிறப்புற்றது. ஆணும், பெண்ணும் பங்கேற்கும் இவ்வாட்டத்தில் ஆண் அரசர் வேடந்தாங்கியும். பெண் அரசி வேடந்தாங்கியும் ஆடுவர். கேரள நாட்டு கதகளி, பஞ்சாபி நாட்டுக் கதை ஆகியவற்றின் நடனக் கூறுகள் பொய்க்கால்குதிரை ஆட்டத்தில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

### உறியடி விளையாட்டு

உறியடி என்பது ஒரு கிராமியக் கலையாகக் கருதப்படுகிறது. உறியடி விழா என்பதும் கோவில் சார்ந்த கலையாகக் கருதப்படுகிறது. உறி 10 அல்லது 15 அடி உயரத்தில் தொங்கிக் கொண்டு இருக்கும். உறியை அடிப்பவர் மூன்று அடி நீளமுள்ள கம்புடன் காத்திருப்பார்.

### உடுக்கடிப் பாட்டு

மழையின்றித் தவிக்கும் காலத்தில் பல ஊர்களில் உடுக்கடிப் பாட்டு நடத்தப்படும். இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் இக்கலை நிகழ்ச்சி பிரபலமாகியுள்ளது. காத்தவராயன் கதையைப் பாடுவதே பெரு வழக்கமாக உள்ளது.


### புலியாட்டம்

தேரோட்டம், சாமி ஊர்வலம் போன்ற திருவிழா நிகழ்ச்சிகளில் இவ்வாட்டம் நிகழ்த்தப்படுகிறது. ஒருவர் புலி போன்ற வேடமிட்டு ஆடுவார். மற்றொருவர் வேட்டைக்காரன் போல் வேடமிட்டு ஆடுவார். இவ்விருவரும் சேர்ந்து ஆடும் ஆட்டம்தான் புலி ஆட்டம் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ வ.துசியந்தன்

# தண்ணீர் என்னும் தங்கம் !





ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைப்படி உலகில் 2.1 பில்லியன் மக்களுக்கு அதாவது 210 கோடி பேருக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை. இவர்களில் 84.4 கோடி பேருக்கு அடிப்படை குடிநீர் வசதிகளே கிடையாது. 26.3 கோடி பேர் குடிநீருக்காக தினமும் 30 நிமிடம் பயணம் செய்து குடிநீர் பிடித்து வருகின்றனர். வீடுகளில் குடிநீர் வசதிகள் இல்லாதவர்கள் 66.3 கோடி பேர். பூமியில் சுமார் 71 வீதமான பரப்பளவில் நீர் உள்ளது. உலகின் மொத்தநீர் வரத்து 33.25 கோடி கனமைல்கள் ஆகும். உலகில் உள்ளநீர் பரப்பில் கடலில் மட்டும் சுமார் 97 வீதம் தண்ணீர் உள்ளதால் நல்லதண்ணீர 3 வீதம் மட்டுமே உள்ளது. உலகில் உள்ள நீர் வளத்தில் 69 வீதம் உறைந்த நிலையிலும் 30 வீதம் நிலத்தடி நீராகவும் உள்ளது. மொத்த நீரில் சுமார் 0.26 வீதம் மட்டுமே நிலத்தில் நல்லநீராக உள்ளது. வரும் 2050 க்குள் உலக நீர்த்தேவை இன்னும் 30 வீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கழிவுநீரில் 80 வீதமான அளவுக்கு சுத்திகரிக்கப்படாமலே நல்ல தண்ணீருடன் கலக்கப்படுகிறது. மனிதனின் தவறுகளால் கடந்த 100 ஆண்டுகளில் 71 வீதமான நீர்நிலைகள் காணாமல் போயுள்ளன. மேற்குறிப்பிட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபன புள்ளிவிவரத்தின் அடிப்படையில் நீர் என்பது உயிரின் ஆதாரமாகும். அது இயற்கையின் கொடையாகும். நீர் இல்லையேல் மண் காய்ந்துவிடும். உணவு உற்பத்தி இருக்காது. மண்ணும் காற்றும்கூட நீரின்றேல் வறண்டு போய்விடும். ஆக, எல்லா இயற்கை வளங்களுக்கும் மனித வளத்துக்கும் தாய் வளம் நீராகும்.

முன்னைய காலங்களில் தூய நீருக்கான பற்றாக்குறை ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால் தூயநீரின் வளம் உலகில் மிகவேகமாகக் குறைந்துகொண்டு செல்வது அவதானிக்கப்பட்டுவருகிறது. இத்தகையபோக்கு கட்டுப்படுத்தப்படாது போகுமானால் எதிர்காலத்தில் விவசாயம் மற்றும் மனிதனின் தனிப்பட்ட பாவனைக்கான தூயநீருக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்படும் ஆபத்தேற்படலாம். நீர்க்கோளத்தை விட்டு நீர் எங்குமே சென்றுவிடுவதில்லை. அவ்வாறிருக்கையில் உலகம் தூய நீருக்கான பற்றாக்குறையை எதிர்நோக்குவது ஏன்? காரணம் என்ன?

காடுகள் பெருமளவில் அழிக்கப்படுதல், நீர் மாசடைதல், நீரின் அதிகரித்த பாவனை ஆகியனவே தூய நீருக்கான பற்றாக்குறை அதிகரிக்கக் காரணம். மனித செயற்பாடுகளின் விளைவினால் புவி உஷ்ணமடைந்து செல்வதால் பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயருகிறது. இதனால் கடல்நீர் புவியினுள் பிரவேசிப்பதன் விளைவாக தூயநீரின் விகிதம் குறைந்துகொண்டே செல்கிறது. இது போதாதென்று மறுபுறத்தில் இரசாயனப் பதார்த்தங்களின் பாவனையினால் தூயநீர் படிப்படியாக மாசடைந்து செல்கிறது. அண்மைய புள்ளிவிபரங்களின்படி உலகளவில் 250 கோடிமக்கள் போதியளவு சுத்தமான நீரை அல்லது நீர் வளத்தை அனுபவிக்க முடியாத நிலையிலுள்ளனர். அவர்களில் 70 சதவீதத்தினர் ஆசிய நாடுகளிலேயே உள்ளனர். ஒவ்வோர் ஆண்டும் நீர் மாசடைதலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை போர் மற்றும் வன்முறைகளால் இறந்தோரின் எண்ணிக்கையைவிட அதிகமாகும். குடிசனப் பெருக்கம், கைத்தொழில் அபிவிருத்தி, விவசாய விரிவாக்கம் முதலியவற்றின் வளர்ச்சிவேகம் நீரின் தேவையை அதிகரிக்கச் செய்துள்ளது. அதனால் தான் சுற்றுச்சூழல் வல்லுநர்கள் மூன்றாம் உலகப் போர் ஒன்று நடந்தால், அது நீருக்கான ஒரு போராகவே இருக்கும் என எச்சரிக்கின்றனர். இதற்கான அறிகுறிகள் இன்று பெரியளவில் காணப்படுகின்றன.

ஐ.நா. சபை கடந்த 1992 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த கூட்டத்தை கூட்டியது. கூட்டத்தில், நீர்வள பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், அதை மக்களிடம் உணர்த்த 'உலக நீர்வள தினம்' கொண்டாடப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஆண்டுதோறும் மார்ச் 22 ஆம் திகதி உலக நீர்வள தினம் சர்வதேச அளவில் கொண்டாடப்பட்டுவருகிறது. ஆனால் இதனால் ஆனபயனென்ன என்று கேட்டால் இதற்குரிய பதில் ஆரோக்கியமாக இருக்காது.

**கேள்வியும் கிராக்கியும்**

மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டேயிருக்க அவர்கட்குத் தேவையான குடிநீர் தேவையும் அதிகரிக்கிறது. வருடாந்தம் சனத்தொகை 90 மில்லியனால் அதிகரித்து செல்கின்றது. தேவையைப் பூர்த்திசெய்ய இயலாத நிலையில் கிடைக்கும் நீரைக் குடிக்கும் நிலைக்கு பல பிரதேச மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பலவித நோய்களுக்கு ஆளாகின்றனர்.

நீரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் இன்று வளர்முக நாடுகளில் பெருமளவானோர் நீர் சார்ந்த நோய்களால் பலியாகின்றனர். சுத்தமான நீரைப் பெறமுடியாமல் வருடாந்தம் 5 வயதுக்கு உட்பட்ட 18 லட்சம் சிறுவர்கள் பலியாகிறார்கள். அசுத்தமான நீரால் ஏற்படும் நோய்களான வயிற்றுப்போக்கு, வாந்திபேதியால் வருடத்துக்கு 22 இலட்சம் பேர் வரை இறப்பதாகக் கூறியுள்ளார்கள். அசுத்தமான நீர் இவ்வாறு மக்களைப் பலியாக்குகிறது.

நீரில் பக்றீரியாக்கள் இருப்பதால் டயரியா, தைபோய்ட், கொலரா, மஞ்சள் காமாலை, போலியோ, குடற் புழுக்கள் போன்ற நோய்கள் வரும் என்பதை



நாங்கள் எல்லோரும் அறிந்திருக்கிறோம். ஆயினும் எத்தனைபேர் இதனை சரியாகக் கடைப்பிடிக்கின்றோம்?


நீருக்கான நெருக்கடியில் மனித நடவடிக்கைகளும் அடங்கியுள்ளன. இவற்றை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாம் கைக்கொண்டு வந்தால் உலகமும் உயிர்களும் வாழும். தொழிற்சாலைகள் தமது கழிவுகளை ஆறுகள், குளங்களில் கொட்டுவதால் இரசாயன மாற்றமேற்பட்டு நீரின் தன்மை மாற்றமடைகிறது. இதனால் பயன்பாட்டுக்கு உகந்த நிலையை நீர் இழக்கின்றது. நிலத்தடி நீரைப் பாதுகாக்கவேண்டியதும் நீர் ஆதாரங்களைக் காக்கவேண்டியதும் மனிதசமுதாயத்தின் தார்மீகக் கடமையாகும். பொறுப்புணர்ந்து செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 03 . 1985



இறப்பு 30 . 03 . 2021

### இராசநாயகம் காஞ்சன்

மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் காஞ்சன் அவர்கள் நேற்று (30.03.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா இராசநாயகம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், லிந்துயா, சிந்துயா, காஸ்திரி ஆகியோரின் அன்பு சகோதரனும், சஞ்சீவன், பிரதீசன், காலஞ்சென்ற ரவிசங்கர் ஆகியோரின் அன்பு சகலனும், தமிழீழன், தமிழாளன், தமிழாரன், லஷ்மின், தர்ஷித் ஆகியோரின் அன்பு தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**மீசாலை கிழக்கு, மீசாலை.** **சஞ்சீவன்-077 248 7172**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### கந்தையா சிவராசா

(உரிமையாளர் – நிமலன்ஸ் மின்னகம், கிளிநொச்சி)

**அன்னை மடியில்**
04.04.1951

**இறைவனடியில்**
01.03.2021

**திதி: மாசி அபரபக்கதிருதியை**

கடந்த 01.03.2021 திங்கட்கிழமை இறைபதம் சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கந்தையா சிவராசா அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் 29.03.2021 திங்கட்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (31.03.2021) புதன்கிழமை அன்னாரின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெறும்.

**குறிப்பு:** ஏற்கனவே அறியத்ததந்ததன் பிரகாரம் 02.04.2021 வெள்ளிக் கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற விருந்த நிகழ்வு Covid - 19, நிலைமை காரணமாக அங்கு நடைபெற மாட்டாது என்பதை மன வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

அன்னம் இல்லம்
24/2, பாரதி வீதி, கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## அறிவித்தல்

### கைதடி வீட்டுத்திட்ட நம்பிக்கை நிறுவகம்

கைதடி வீட்டுத்திட்ட நம்பிக்கை நிறுவகத்திற்கு உரித்தான A- 9 வீதியிலுள்ள சிங்கமலைத் தோட்டம், மற்றும் A - 32 வீதியில் உள்ள சவான்காட்டுத் தோட்டம் ஆகிய குடியிருப்புக்களில் வசிப்பவர்கள் (1974ஆம் ஆண்டு உறுதி வைத்திருப்பவர்கள் உட்பட) எதிர்வரும் 10.04.2021 மாலை 5.00 மணிக்கு முன்னர் தமது காணிகளுக்கான உறுதியையும் அது சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் 53-A சிங்கமலைத் தோட்டத்திலுள்ள நம்பிக்கையாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, தங்கள் உரிமத்துக்கான சட்டபூர்வ அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இல்லாவிடின், நிறுவகத்தின் யாப்பு விதிகளுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், நீங்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்டதற்கமைய உங்கள் நிலம் நிறுவக யாப்பின் பிரகாரம் நிறுவகத்துக்கே சொந்தமாகும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

சட்டபூர்வமான அங்கத்துவ அடையாள அட்டையை பெறத்தவறும் எவரும், தங்களின் நிலம், வீடு சம்பந்தமான விடயங்களில் எமது நிறுவகத்துடன் தொடர்பு கொள்ள முடியாது என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

**கைதடி வீட்டுத் திட்ட நம்பிக்கை நிறுவகம்**
**செயலாளர்**

## விண்ணக வாழ்வின் பதின்மூன்றாம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 20 . 06 . 1938



இறப்பு 31 . 03 . 2008

அமரர்

### சுப்பிரமணியம் யோசேப் பூராசா

(ஓய்வு பெற்ற அதிபர், முன்னாள், செயலாளர் புனித அந்தோனியார் ஆலயம், முன்னாள் இயக்குனர் தெய்வக் குழந்தைகள் இல்லம்)

"நேர்மையுள்ளோர் மக்கள் மனதில் என்றும் வாழ்வர்"
(தி.பா.112:6)

தங்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**என்றும் தங்கள் நினைவுடன்**

புங்குடுதீவு 2 குடும்பத்தினர்.

# INVITATION FOR BID

## Office of the Regional Director of Health Services, Jaffna

1. The **Chairman, Regional Procurement Committee**, on behalf of the Office of the Regional Director of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the **supplying and installation goods** described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered as company.
4. Qualifications requirements are indicated in Bidding document. Additional details are provided in the Bidding Data Sheet.
5. Interested bidders may obtain further information from **Office of the Regional Director of Health Services, 572/3 Hospital Road, Jaffna ( T.No: 021-2222278, FAX -021-2229971)** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 16.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Office of the Regional Director of Health Services, 572/3 Hospital Road, Jaffna ( T.No: 021-2222278, FAX -021-2229971), from 01/04/2021 until 20/04/2021 from 9.00 hrs to 15.00 hrs upon payment of non-refundable fees Rs.3,500.00**. The method of payment should be by cash.
   Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Office of the Regional Director of Health Services, 572/3, Hospital Road, Jaffna on or before 02.30 pm on 21/04/2021.** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
6. Pre-Bid Conference will be held at **Conference Hall, Office of the Regional Director of Health Services, 572/3 Hospital Road, Jaffna on** commencing at 02.30 P.M on **09/04/2021.**
7. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Bid ID | Description of Work | Contract Period | Required Bid Security | |
|---|---|---|---|---|
| | | | Security Amount | Validity Period |
| NP/04/41/PSDG/Lift/01/2021 | Procurement of Supplying, Installation and Commissioning of 750Kg 11 Person Machine Room Bed Elevator at Base Hospital, Chavakachcheri, Jaffna | 120 days | 53,000.00 | Till 03.08.2021 |
| NP/04/41/PSDG/Lift/02/2021 | Procurement of Supplying, Installation and Commissioning of 1000Kg 15 Person Machine Room Bed Elevator at Base Hospital, Pointpedro, Jaffna | 120 days | 110,000.00 | Till 03.08.2021 |
| NP/04/41/PSSP/Gene/01/2021 | Procurement of Supplying, Installation and Commissioning of 25 kv Generator (02 Nos) at DH Gurunagar and DH Pandatharippu. | 60 days | 20,000.00 | Till 06.07.2021 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Office of Regional Director of Health Services**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 11 . 1928

மறைவு 10 . 04 . 2020

### அமரர் கணபதிப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுநிலை ஆசிரியர்)

கல்வியே கருந்தனமாய்
உழைப்பால் உயர்ந்து
பண்புடன் வாழ்ந்து
எமக்கு வழிகாட்டிய
அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய
விசவத்தனையானை வேண்டுகின்றேம்

**பண்ணாகம், சுழிபுரம்.**

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

TVS Wego மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (BFC/28000km/ கறுப்பு நிறம்)

**077 898 9691 யாழ்ப்பாணம்**

---

## உடனடி வேலை வாய்ப்பு

**நிறுவனம் : Tokyo Supermix Pvt (Ltd)**

எழுதுமட்டுவாழ் தெற்கு மிருசுவில், யாழ்ப்பாணம்.

**வெற்றிடம் : கனகரவாகன சாரதி**

**தகைமை : குறைந்தபட்சம் 03 வருட அனுபவம்**

வயதெல்லை 25 – 50

அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்களுக்குமுன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு :- மேலே குறிப்பிடப்பட்ட வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு (01.04.2021 - 09.04.2021) திகதிகளில் சுயவிபரக்கோவையுடன் 9.00 Am - 3.00 Pm வரையான கிழமை நாட்களில் நேரில் சமூகம் தரவும்.

**முகவரி : டோக்கியோ ரெடிமிக்ஸ் பிளாண்ட் மிருசுவில், யாழ்ப்பாணம்**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### வலத்தீஸ் திரேசம்மா

எமது கல்லூரியின் ஆசிரியரான திருமதி மேரி கிறிஸ்றி ஞானராஜா அவர்களின் அன்புத் தாயார் திருமதி வலத்தீஸ் திரேசம்மா அவர்கள் 01.03.2021 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மண்ணில் : 23.03.1927**
**விண்ணில் : 01.03.2021**

ஆசிரிய நலன்புரிச்சங்கம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.க

---

## TECHNICAL OFFICER தேவை

Diploma or சமமான படிப்பு படித்துக் கொண்டு வருபவர் / படித்து முடித்தவர்கள் Civil Construction Site ஐ மேற்பார்வை செய்ய உடன் Site Supervisor தேவை

**077 344 4801**

---

## வேலையாள் தேவை

வயதான பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் பெண் வேலையாள் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**076 948 2680**

---

## குருபூசை

**தவத்திரு விஸ்வப்பிரம்ம ஸ்ரீ நாகலிங்க சுவாமிகள் குருபூசை 02.04.2021 வெள்ளிக்கிழமை சங்கானையில்** அவரது **நினைவாலயத்தில் விசேட பூசைகள்** நடைபெற்று **மதியம் 1.00 மணியளவில் அன்னதான** நிகழ்வும் நடைபெறும்

**உபயம் திரு.இராஜரட்ணம் கிரிதரன் குடும்பம்**

---

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வீடு , வாடகைக்கு மற்றும் விற்பனைக்கு உண்டு.

* 4 அறைகள்
* 2 இணைந்த குளியல் அறைகள்
* 1 சாதாரண குளியல் அறை
* 1 சமையல் அறை
* Hall with Varanta

பயன் தரும் மரங்கள் சுற்று மதில் Office ஆகவும் வீடாகவும் பயன்படுத்த முடியும்.

**மாத வாடகை : 36 000 ரூபா**

**விற்பனை விலை 3 00 00 000** (3 Crore)

மேலதிக விபரங்களுக்கு

**074 027 2778**

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 07.04.2021 அன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| இல | இலக்கம் | வயது | கடா /மறி |
|---|---|---|---|
| 01 | *4303-0919-0066* | 4 வருடம் | கடா |
| 02 | *4303-0919-0095* | 2 வருடம் & 8 மாதம் | கடா |
| 03 | *4303-0919-0104* | 2 வருடம் & 5 மாதம் | கடா |
| 04 | *4303-0919-0113* | 2 வருடம் & 3 மாதம் | கடா |
| 05 | *4303-0919-0135* | 1 வருடம் & 9 மாதம் | கடா |
| 06 | *4303-0919-0142* | 1 வருடம் & 8 மாதம் | கடா |
| 07 | *4303-0919-0149* | 1 வருடம் & 6 மாதம் | கடா |
| 08 | *4303-0919-0150* | 1 வருடம் & 6 மாதம் | கடா |
| 09 | *4303-0919-0154* | 1 வருடம்& 5 மாதம் | கடா |
| 10 | *4303-0919-0155* | 1 வருடம் & 5 மாதம் | கடா |
| 11 | *4303-0919-0159* | 1 வருடம் & 5 மாதம் | கடா |
| 12 | *4303-0919-0161* | 1 வருடம் & 5 மாதம் | கடா |
| 13 | *4303-0919-0163* | 1 வருடம் & 5 மாதம் | கடா |
| 14 | *4303-0919-0165* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 15 | *4303-0919-0167* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 16 | *4303-0919-0169* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 17 | *4303-0919-0170* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 18 | *4303-0919-0176* | 1 வருடம் & 3 மாதம் | கடா |
| 19 | *4303-0919-0178* | 1 வருடம் & 2 மாதம் | கடா |
| 20 | *4303-0919-0185* | 1 வருடம் & 2 மாதம் | கடா |
| 21 | *4303-0919-0186* | 1 வருடம் & 2 மாதம் | கடா |
| 22 | *4303-0919-0191* | 11 மாதம் | கடா |
| 23 | *4303-0919-0194* | 11 மாதம் | கடா |
| 24 | *4303-0919-0021* | 6 வருடம் | மறி |
| 25 | *4303-0919-0023* | 6 வருடம் | மறி |
| 26 | *4303-0919-0046* | 4 வருடம் & 6 மாதம் | மறி |
| 27 | *4303-0919-0049* | 4 வருடம் & 5 மாதம் | மறி |
| 28 | *4303-0919-0079* | 2 வருடம் & 4 மாதம் | மறி |
| 29 | *4303-0919-0094* | 2 வருடம் & 8 மாதம் | மறி |
| 30 | *4303-0919-0106* | 2 வருடம் & 6 மாதம் | மறி |
| 31 | *4303-0919-0123* | 2 வருடம் & 1 மாதம் | மறி |
| 32 | *4303-0919-0139* | 1 வருடம் & 8 மாதம் | மறி |
| 33 | *4303-0919-0143* | 1 வருடம் & 8 மாதம் | மறி |
| 34 | *4303-0919-0164* | 1 வருடம் & 5 மாதம் | மறி |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 05.04.2021 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்ட பின்னர் மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 இனைச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்குகொள்ள முடியும். ஏலவிற்பனைக்கு வருகை தரும்போது பற்றுச்சீட்டை கொண்டு வருதல் அவசியமானதாகும். ஏலவிற்பனையானது 07.04.2021 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்

பதிவாளர்

---

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA INVITATION FOR BIDS (IFB)

### Building Works

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from interested bidders for the Construction work described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).
5. Interested bidders may obtain further information from **Regional Director of Health Services office, 572/3 Hospital Road, Jaffna ( T.No: 021-2222278, FAX -021-2229971)** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services, Jaffna from 01/04/2021 until 15/04/ 2021 from 9.00 hrs to 15.00 hrs upon payment of non-refundable fees Rs.1,000.00**. The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on or before 10.00 Am hr on 16/04/2021.** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, **572/3 Hospital Road, Jaffna on** commencing at **02.30 P.M on 07.04.2021.**
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Minimum CIDA Grade Required | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/ 2021/PSDG / W/04 | Improvement Work at Base Hospital Tellippalai,Jaffna-Kitchen,OPD and EU | 0.926 | 68 Days | C 8 or C9 (Buildings) | 9,300.00 | Till 01.07.2021 |
| NP/04/41/ 2021/PSDG /W/05 | Construction of Vehicle park at Base Hospital Point pedro,Jaffna. | 1.50 | 75 Days | C 8 or C9 (Buildings) | 15,000.00 | Till 01.07.2021 |
| NP/04/41/ 2021/PSSP/ W/05 | Repair and Renovation of Kitchen at Divisional Hospital Kurunagar,Jaffna | 0.536 | 58 Days | C 8 or C9 Buildings) | 5,400.00 | Till 01.07.2021 |
| NP/04/41/ 2021/MSD/ W/01 | Improving Store Facilities for RMSD at Jaffna. | 1.657 | 77 Days | C 8 or C9 Buildings) | 16,600.00 | Till 01.07.2021 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.

**Chairman**
**Regional Procurement Committee**
**Office of Regional Director of Health Services,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 12 . 1941



இறப்பு
30 . 03 . 2021

### ஸ்ரீமதி லலிதாம்பாள் பரமேஸ்வரக் குருக்கள்


ஸ்ரீமதி லலிதாம்பாள் பரமேஸ்வரக்குருக்கள் நேற்று (30.03.2021) செவ்வாய்க்கிழமை நண்பகல் இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களின் தர்ம பத்தினியும், காலஞ்சென்ற குமாரசாமிக் குருக்கள் பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், சுவாமிநாதக் குருக்கள் செல்லம்மா தம்பதியரின் மருமகளும், ஸ்ரீமதி ஸ்ரீ.ஸ்ரீவித்யாரஞ்ஜனி, ஸ்ரீமதி.ம.காயத்ரி (காலஞ்சென்ற), ஸ்ரீமதி பி.சாருகேசி, ஸ்ரீமதி வி.கீதாநந்தினி, ஸ்ரீமதி. இ.மஞ்சுபாஷினி, ஸ்ரீமதி ம.சுபாஷினி, ஸ்ரீமதி தி. கௌசல்யா, ஸ்ரீ சுவாமிநாத ராகவன், ஸ்ரீமதி. ஸ்ரீ. ஸ்ரீசாங்கரி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஸ்ரீரங்கநாதன், மலரகிதசர்மா, பிரபாகரேஸ்வரசர்மா, விக்னேஸ்வரதாஸ், இராதகிருஷ்ணக்குருக்கள், மனோகரன், Dr. திவாகரன், வத்சலா, ஸ்ரீநாத் ஆகியோரின் மாமியாரும், சிவானுஜா, சிந்துஜா, வசீகரன் பிரியங்கா, ஆதித்யா தினேஸ், பிரதீஸ், கீர்த்தனா, லஷ்மிபிரியா, சந்தியா, கார்த்திக், ராகேஸ், பவிஷ், காவ்யா, சாய்ஸ்ரத்தா ஆகியோரின் பாட்டியும், ராகுல், ரோகன், விகாசினி, யுதிஸ்ரன், காம்யா, ப்ராக்ஞா, சாக்ஷி, ப்ரத்வீன், தேஜஸ்வினி, கைஷா ஆகியோரின் பூட்டியும், பாலசுப்பிரமணிய சர்மா, பூலஷ்மி, தனலஷ்மி, யோகலஷ்மி, பாலசரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பாற்பண்ணை இந்து மயானத்தில் தகனகம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்.
071 805 4598
077 353 1500
077 817 4478

79, வீடமைப்புத்திட்டம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## ஆண்டு ஒன்றின் நினைவுகளில்

மலர்வு
17 . 05 . 1965



உதிர்வு
18 . 03 . 2020

அமரர்
### கந்தசாமி குலேந்திரராஜா

ஓராண்டு கழிந்தது அப்பா எங்களை விட்டுச் சென்று
ஒரு யுகத்தை கடந்த வலி நீங்கள் இல்லாத ஓராண்டு
நீங்கள் இல்லாத ஒவ்வொரு நொடியும் ரணமாகவே கழிகிறது
பிள்ளைகளை பண்பாய் பக்குவமாய் வளர்த்து
பார்போற்ற வாழ்ந்தீர்கள் பாசத்தை கொட்டிக் கொடுத்துவிட்டு
பாதியில் எங்களை தவிக்கவிட்டு சென்றது ஏனப்பா
உங்கள் ஆத்மசாந்திக்கரய்ப் பிரார்த்திக்கும்

எழுதுமட்டுவாழ் தெற்கு
எழுதுமட்டுவாழ்

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
23 . 07 . 1930



இறப்பு
30 . 03 . 2021

### செல்லத்துரை அன்னம்மா

கணபதியப்புலம் கோப்பாய் மத்தி, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட செல்லத்துரை அன்னம்மா நேற்று (30.03.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதி யரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா பார்வதி தம்பதியரின் மருமகளும், சிவசோதி, இராஜேஸ்வரி, சத்தியசோதி சந்திராதேவி, வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாதேவன் (சந்திரன்), ஸ்ரீகாந்தசெல்வம் (ஸ்ரீ), சிவலோகநாதன் (கிச்சி), குபேந்திரசிங்கம் (இந்திரன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், றஜீனா, மனோறஞ்சன், சுகிதா, குகதாஸ், சாந்தினி, கவிதா, தவ பாலன், நவநீதா, கிருபாகரன், சோபனா, காண்டீபன், யசோதா, ரவீந்திரா, சத்தியசீலன், சர்மிளா, தயாபரன், யாமினி, சுரேஸ்குமார், கிருபா, ராஜகாந்தன், தனுசா, பிரதீப், சகிலா, சிவதாசன், பிரியதர்சன், பிரியதர்சினி, சொபிசன், ஆகி யோரின் பேர்த்தியும், ஜஸ்ணவன், ஜிந்துஜா, டிலக்சன், யன்சிகா, யானுசன், அபிரன், அபிசா, அபிசன், சாரதா, சாரங்கா, பிரியங்கா, தரணிகா, சதுர்சிகன், மது சாளினி, பன்சிகா, யுவேதா, பவிசாந், அனேசிகா, அபினுகா, யதுர்சிகா, பிறின் சிகா, தனுபிரியன், பிரணவி, அபினாஸ், மிலன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2021) புதன்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 06 . 1952



மறைவு
30 . 03 . 2021

### திருமதி ஆரோக்கியநாதர் அக்னேஸ் அம்மா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், ஆண்டான் செட்டிவெளி நானாட்டானை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆரோக்கியநாதர் அக்னேஸ் அம்மா அவர்கள் நேற்று (30.03.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இன்னாசிமுத்து அந்தோனியாப் பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிரன்சிப்பிள்ளை றோசமுத்து ஆகியோரின் அன்பு மருமகளும், ஆரோக்கியநாதரின் (நிறோசினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) அன்பு மனைவியும், துசாந்தன், சசிகரன், துசாந்தினி, நிறோ, நிலா ஆகியோரின் அன்புத் தாயாரும், சாளற், மெலனி, டொனி, யூட், அலெக்ஸ் ஆகியோரின் மாமியாரும், சவ்றோனா, சைறோன், செறோன், நெகேமியன், றுத்விகா, அஷ்சினி, ஜெஸ்மின், அகானா, சகான், நொளான், மயூரா, ஆதீரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், திரேசா புஸ்பத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்கம் நாளை (01.04.2021) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நானாட்டான் தூய ஆரோக்கிய மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நானாட்டான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.கொரோனா...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது யாழ்ப்பாண நிலைமை தொடர்பாக சுகாதார அமைச்சர் அமைச்சரவையிலும் தெளிவுபடுத்தினார்.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும் முழுமையான ஒத்துழைப்பையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கு பாரதூரமான பிரச்சினை இல்லை. நிலைமையை விரைவில் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (எ-ப)

### தொல்பொருள்...

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட தொல்லியல் அகழ்வு அதிகாரி மணிமாறன் தலைமையில் இந்த எச்சங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொல்பொருள் எச்சங்கள் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவை என்று கருதப்படுகிறது. அந்தக் காலப்பகுதியில் வீதியால் போக்குவரத்தை மேற்கொள்பவர்கள் மற்றும் சுமையை சுமந்து வருபவர்கள், தாம் சுமந்து வரும் சுமையை சுமைதாங்கியில் இறக்கி வைத்து களைப்பாறி நீர் அருந்தி விட்டுச் செல்லும் வகையில் இந்தக் குடிதண்ணீர் கிணறும், சுமை தாங்கியும் அமைக்கப்பட்டுள்ளன.

இவை 1960 ஆம் ஆண்டு வரை பாவனையில் இருந்தன எனவும் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் சிதைவடைந்து விட்டன எனவும் அந்தப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இந்த தொல்பொருள் எச்சங்கள் தற்போது வீதி அகலிப்புப் பணியின்போது கண்டுபிடிக்கப்பட்டு தொல்லியல் அகழ்வு அதிகாரிகளால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அந்தக்காலத்தில் அமைக்கப்பட்டிருந்த அளவுகளில் தற்போது மீளமைக்கப்பட்டுள்ளன. (ற-159)

### யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் நகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 320 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன. அவர்களில் 7 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் 755 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 22 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 57 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 7 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் இருவர் திருநெல்வேலி பொதுச்சந்தை தொகுதியைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவபீட மாணவர் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் வவுனியாவைச் சேர்ந்தவர்.

திருநெல்வேலி சந்தைத் தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்புடைய இருவருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது. அவர்கள் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தனிமைப்படுத்தல் விடுதியில் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 6 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த ஒருவரின் மாதிரியும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் நோய் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், கிளிநொச்சியில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர கடைத்தொகுதியில் பெறப்பட்ட 800க்கும் மேற்பட்டோரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக கொழும்பு முல்லேரியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் இன்னமும் கிடைக்கவில்லை. (எ-26)

### வவுனியா...

கொள்ளவே அவர் வவுனியாவுக்கு வரவுள்ளார். கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், "கிராமத்துடன் உரையாடல்" என்ற உரையாடல் நிகழ்ச்சி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் இதுவரை தென்பகுதியில் நடைபெற்றுவந்த நிலையில், தற்போது வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பெரும்பான்மை இன மக்கள் குடியேற்றம் செய்யப்பட்ட கிராமமான கலாபோகஸ்வேவ கிராமத்துக்குச் செல்லும் ஜனாதிபதி அங்குள்ள மக்களுக்குடன் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-18)

### கிளிநொச்சி...

மோட்டார் சைக்கிள் வீதியால் நடந்து சென்றவரை மோதி விபத்து நடந்துள்ளது. வீதியால் நடந்து சென்றவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த இருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும், அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி, விவேகானந்தா நகரைச் சேர்ந்த செல்லப்பா சந்திரகுமார் என்பவரே உயிரிழந்துள்ளார் .

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் தொடர்ந்தும் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்த விபத்துத் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-6,10)

### சுதந்திரக்கட்சி....

தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கண்டியில் நேற்று, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எனது கட்சி பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தது. ஆனாலும், 13 ஆசனங்களை வென்றெடுத்துள்ளது. 1977 ஆம் ஆண்டு சுதந்திரக்கட்சி எம்.பிக்களின் எண்ணிக்கை 8 ஆக குறைந்தபோதும் 1994 ஆம் ஆண்டு சுதந்திரக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. எனவே, சுதந்திரக்கட்சியை இந்நாட்டின் பிரதான கட்சியாக கட்யெழுப்புவது கடினமான விடயமாக அமையாது.

எவ்வாறாயினும் சுதந்திரக்கட்சியின் அரசை அமைக்கவே முயற்சித்து வருகின்றோம். இதற்கு மக்கள் ஆதரவளிப்பார்கள்.

நாட்டின் எதிர்காலம் கருதி தற்போதைய அரசுக்கு முழு ஆதரவு வழங்கப்படும். அதேபோல் ஓர் அரசியல் கட்சியாக, கட்சியை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். என்றார். (எ-22,44)

### இலங்கை...

சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த இணையவழி ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் அங்கு எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'இப்படியான கொள்கை அடிப்படையிலான தீர்மானத்தை தனி அமைச்சால் எடுக்க முடியாது. அது தொடர்பில் அமைச்சரவையே முடிவெடுக்க வேண்டும்.

எனவே, அவ்வாறானதொரு யோசனை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரால் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படவில்லை. அரசும் அவ்வாறானதொரு முடிவை எடுக்கவில்லை என்றார்.

அதேவேளை, கடும் நிபந்தனைகளுடன் வாரத்தில் மூன்று நாள்கள் 250 படகுகளுக்கு இலங்கைக் கடற்பரப்பில் கட்டணம் செலுத்தி மீன்பிடிக்க அனுமதி வழங்குவது தொடர்பில் கொள்கையளவில் இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது எனச் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

### 'தில்' இருந்தால்...

தாஸ.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெற்ற நாள்களில், இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் இந்த வருடம் விரைவில் நடைபெறவுள்ளது என ஜனாதிபதி தலைமையிலான அரச தரப்பினர் கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர். ஆனால், கூட்டத்தொடர் நிறைவடைந்த பின்னர் இலங்கைமீது புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அமைச்சர்கள் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த வருடம் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என ஓர் அமைச்சரும், கலப்பு முறைமையில் விரைவில் தேர்தலை நடத்த அரசு உத்தேசித்துள்ளது என இன்னோர் அமைச்சரும், புதிய அரசமைப்பு வந்த பின்னரே தேர்தல் நடக்கும் என மற்றுமோர் அமைச்சரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. தீர்மானத்துக்கு அஞ்சியே மாகாண சபைத் தேர்தல் இந்த வருடம் விரைவில் நடைபெறும் என்று அரசு கூறியிருந்தது. ஆனால், தீர்மானம் நிறைவேறிய பின்னர் அரசின் உண்மை முகம் வெளிப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் தற்போது நடைபெற்றால் அரசு படுதோல்வியடையும் என்பது ஜனாதிபதிக்குத் தெரிந்த விடயம். அதனால்தான் தேர்தலை நடத்துவதில் அரசு இழுத்தடிப்பு செய்கின்றது.

ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசுக்கும் துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்திக் காட்டட்டும் -என்றார். (எ-22

---

## இந்த மாதம் யாழில் 496 தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த மாதத்தில் மட்டும் 496 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 668 தொற்றாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில், இந்த மாதத்தில் மட்டும் 496 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். என்றார். (எ-20)

---

## தேன் எனத் தெரிவித்து சீனிப் பாணி விற்பனை

கொடிகாமம், மார்ச் 31

கொடிகாமம், கச்சாய் பகுதியில் தேன் என்று கூறி சீனிப் பாணியை ஏமாற்றி விற்பனை செய்துள்ளனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வீதிச் சீரமைப்புப் பணிகளில் ஈடுபடுவோர் என்று கூறும் நபர்கள் மரப்பொந்துகளில் இருந்து எடுத்த தேன் என்று கூறி வீடுகளுக்குச் சென்று சீனிப் பாணியை விற்பனை செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. குறைந்த விலைக்கு அவர்கள் அதை விற்றதால் அதிகளவான மக்கள் அவற்றை வாங்கி ஏமாந்துள்ளனர்.

அவர்கள் கூறிய நிறுவனத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அங்கு அவ்வாறு எவரும் பணியாற்றவில்லை என்று கூறப்பட்டது என்றும் மக்கள் தெரிவித்தனர். (எ-159,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தலை சந்திக்க பெரமுன தயார்

## உறுப்பினர் கஞ்சன தெரிவிப்பு

**கொழும்பு,மார்ச் 31**

**மாகாண சபைத் தேர்தலைச் சந்திக்க நாம் தயாராகவே இருக்கிறோம். ஆகவே ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்துமாறு நாம் சகல தரப்பினரிடமும் கேட்டு கொள்கிறோம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர்கள் மன்றத்தின் தலைவர் கஞ்சன ஜயரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு, தற்போது 4 ஆண்டுகளாகிறது. சகல மாகாண சபைகளின் உறுப்பினர்களது பதவிக்காலம் முடிவடைந்துள்ளது.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாது இயங்கி வருகிறது. இது இலங்கை அரசியல் வரலாற்றில் ஓர் கறையாகும்.

ஜனாதிபதி, பிரதமர், சிறிலங்கா பொதுஜன பெரமுனவை அமைப்பதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய பசில் ராஜபக்ச முவருமே மாகாண சபைத் தேர்தலைக் கூடிய விரைவில் நடத்துமாறு கூறியிருந்தனர். மாகாண சபைத் தேர்தலை இரண்டு வழிமுறைகளின் கீழ் நடத்துவது குறித்து அமைச்சரவைப் பத்திரமொன்றை விட யத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

அந்தப் பத்திரத்தை ஆராய வேண்டுமென்று கோரி ஒரு வார காலஅவகாசம் கேட்டிருந்தனர்.

எனினும், தற்போது பல மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், இதற்கான முடிவு இதுவரையிலும் எடுக்கப்படவில்லை.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பான வாத விவாதங்கள் நடத்தாது, அதனை அங்கீகரிக்கப்படாது. இந்த அமைச்சரவைப் பத்திரத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த முறை அமைச்சரவைப் பத்திரத்துக்கு நடந்தது போன்று இம்முறையும் நடத்த வேண்டாமென்று சகோதர கட்சிகளின் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம். என்றார்.(கஇ)

# புலிகளின் முகாமில் புதையல் தோண்டிய ஐவர் நள்ளிரவில் கைது

கிளிநொச்சி, மார்ச் 31

புதையல் தோண்ட முயற்சித்த ஐவரை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்று முன்தினம் நள்ளிரவு கைது செய்துள்ளனர்.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாயனூர் பகுதியில் உள்ள காட்டுப்பகுதிகளில் விடுதலைப்புலிகள் பயன்படுத்திய அன்பு முகாம் என்று அழைக்கப்படும் பகுதியிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மாத்தளை, கொழும்பு மற்றும் கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐவர் குறித்த பகுதியில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் புதையல் தோண்டுவதற்காக வந்துள்ளனர். இது தொடர்பில் இராணுவப் புலனாய்வாளர் மற்றும் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த அவர்கள் புதையல் தோண்ட முயற்சித்த ஐவரையும் கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்காக பயன்ப டுத்தப்படும் ஸ்கேனிங் கருவி ஒன்றும் ஏனைய பொருள்கள் மற்றும் பயணித்த மோட்டார் கார் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ-113)

# கோட்டை - பதுளை ரயில் சேவை இன்று

கொழும்பு,மார்ச் 31

கொழும்பு கோட்டைக்கும் பதுளைக்கும் இடையிலான தேனுவர மெனிகே ரயில் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேனுவர மெனிகே ரயில் காலை 6.30 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு, மாலை 3.01 மணிக்கு பதுளை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

பதுளை ரயில் நிலையத்திலிருந்து காலை 8.00 மணிக்குப் புறப்பட்டு மாலை 4.38 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும். (க-இ)

# நாட்டுக்கான சேவைகளால் ராஜபக்சக்களுக்கு பாதுகாப்பு

## பெரமுன எம்.பி. பெருமிதம்

கொழும்பு,மார்ச் 31

ராஜபக்சக்களின் குடும்பத்தினர் நாட்டுக்குச் செய்து வரும் சிறந்த சேவைகளால், அவர்களுக்கு இயற்கையால் விடுவிக்கப்படும் ஆபத்துக்களில் இருந்தும் பாதுகாக்கப்படுகின்றனர் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஷிந்திர ராஜபக்ச தெரிவித்தார்.

அண்மையில் மொனராகலைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நான் காயமடைந்திருந்தேன். இருப்பினும், கடவுளின் துணை இருந்தமையால் எனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது.

தற்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச,பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் படுகொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதிலிருந்து அவர் தப்பிக்க முடிந்தது. இவ்வாறு ராஜபக்சக்களுக்கு இயற்கையிடம் இருந்தும் பாதுகாப்பு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# மாற்றுத்திறனாளிகளுக்கு உலர் உணவுப்பொருள்கள்!

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவு மல்லாவிப் பிரதேசத்தின் அனிஞ்சியங்குளம் கிராமத்தில் மாற்றுத்திறனாளிகள் 12 பேருக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. லண்டனில் வசித்து வரும் விஜிதரன் ஜெனித்தா தம்பதிகளின் புதல்வனின் 10 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, அவரது பேரன் சரவணமுத்து ஜெயகாந்தனின் நிதிப் பங்களிப்பில் இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ற-222)

# யூரியூப் சனலின் பணியாளர்களிடம் மேலதிக விசாரணை

கொழும்பு,மார்ச் 31

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட யூரியூப் சனல் ஒன்றின் பணியாளர்கள் இருவரும், மேலதிக விசாரணைக்காக கொழும்பிலுள்ள பயங்கரவாதத் தடுப்பு பிரிவின் தலைமைய கத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் விதமாகச் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில், பெண் பணியாளர் உள்ளிட்ட இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அலுவலகத்தை முற்றுகையிட்ட பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர், அங்கிருந்தவர்களை விசாரணைக்குட்படுத்தி, ஆவணங்களையும் சோதனையிட்டனர். அங்கிருந்த 5 மடிக்கணினிகள், 5 கணினிகள் என்பவற்றையும் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

**வேலையாட்கள் தேவை**

ஆனைக்கோட்டையில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு கொத்து ரொட்டி போடத்தெரிந்தவர் தேவை.
தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**தொடர்பு: 076 288 2545**

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் (ஆண்) தேவை.
வயதெல்லை 18 – 25
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**077 972 4042, 077 924 3325**

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 40 வயது. விசாக நட்சத்திரம். துலாம் ராசி. 6இல் செவ்வாய் உடைய தனியார் தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்பு: 0[illegible] 836 4783**

# கண்ணகைபுரத்தைச் சேர்ந்த எவரும் குடமுருட்டியில் மணல் அகழ்வதில்லை

## கி.அ.சங்கம் மாவட்டச் செயலருக்கு கடிதம்

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி குடமுருட்டி ஆற்றுப்படுகையில், கண்ணகைபுரம் கிராமத்தைச் சேர்ந்த எந்த ஒருநபரும் மணல் அகழ்வில் ஈடுபடுவதில்லை என்று அந்தக் கிராமத்தின் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் மாவட்டச் செயலருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

கடந்த 23ஆம் திகதி பூநகரி குடமுருட்டியில் நடைபெற்ற சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் கண்ணகைபுரம் கிராம மக்கள் குடமுருட்டி ஆற்றுப்படுகையில் மண் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என பூநகரிப் பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். கண்ணகைபுரம் கிராமத்தில் 303 குடும்பங்கள் வாழ்கின்றன.

மூன்று உழவு இயந்திரங்கள் தாம் கிராமத்தில் உள்ளன. எமது கிராமத்தில் இருந்து குடமுருட்டி ஆற்றுப்படுகையில் எவரும் மண் அகழ்வில் ஈடுபடுவதில்லை என்பதை உறுதி செய்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை, குடமுருட்டி ஆற்றுப்படுகையில் இருந்து பரந்தன் பூநகரி வழியாக கடந்த பத்தாண்டுகளாக இரவு வேளைகளில் டிப்பர்களில் மணல் வெளியிடங்களுக்கு தொடர்ச்சியாக கொண்டு செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-13)

**இரணைமடு திருவருள்மிகு கனக[illegible]பிகை அம்பாள் பெருங்கோயில்**

**வருடாந்த பொதுக்கூட்டம்**

- நாள் : 11.04.2021 ஞாயிற்றுக்கிழமை
- இடம் : ஆலய பல்சேவை மண்டபம்
- நேரம் : காலை 9.00 மணியளவில்
- தலைவர் : எஸ்.என். செல்வராசா

*தகவல்:* ஆலய அறங்காவலர் சபை
077 806 5315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.